விலை ரூபா: 5.00 பக்கங்கள் பன்னிரண்டு **Registered as a News paper in Sri Lanka**

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 தை 26 வெள்ளிக்கிழமை (08.02.2002) தொலைபேசி 3378 ஒலி 51




## புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் முக்கிய அம்சங்கள் உண்டு

# புலிகளின் கோரிக்கைகளை முழுமையாக ஏற்க முடியாது!

### அமைச்சர் ஜி. எல். பீரிஸ் தெரிவிப்பு

(நமது நிருபர்)

**இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டங்கள் அடங்கிய "புரிந்துணர்வு ஒப்பந்தத்தில்" அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் இணங்கக் கூடிய அம்சங்கள் காணப் படுகிறது.**

**எதிர்வரும் 24ந் திகதிக்குள் இரு சாராரும் இவ் ஒப்பந் தத்தில் கைச்சாத்திடவுள்ளனர். இவ்வாறு அமைச்சரவை யின் பேச்சாளர், அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

நோர்வே அரசினால் எடுத்து வரப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப் பந்தத்தில் அரசும் விடுதலைப் புலிகளும் ஒப்பமிடக்கூடிய வகை யில் முக்கிய அம்சங்கள் இடம் பெற்றுள்ளன. இருந்த போதும் நாம் அவசரப்பட்டு எதனையும் செய்துவிட முடியாது, ஆறுதலா கவே சிந்தித்து செயற்பட விரும் புகிறோம். என்றும் போராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள் ளார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில், இப் புரிந்துணர்வு ஒப்பந் தத்தில் மனிதாபிமான விடயங் கள், சமூக அபிவிருத்தி விடயங் கள், மற்றும் பாதுகாப்பு, யுத்த நிறுத்தத்தைக் கண்காணிக்கும் குழுக்கள் தொடர்பான பல முக்கிய அம்சங்கள் காணப் படுவதாக இருந்த போதும் அதன் முழுமையான விபரங்களை வெளியிட முடியாதுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அனைத்துக் கோரிக்கைகளை யும் நாம் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. புலிகளின் கோரிக்கைகள் குறித்து நாம் அறிந்து வைத்துள்ளோம்.

மாதம் ஒரு தடவை யுத்த நிறுத்தத்தை நீடிக்காமல் தொ டர்ச்சியாக யுத்த நிறுத்தத்தை நீடிப்பதுதான் அரசின் நோக்கம். அதற்கான நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டு வருகின் றோம் என்றும் அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ளார். (வ)



பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை நேற்றிரவு நோர்வேயின் பிரதி வெளியுறவு அமைச்சர் ஹெல்கிசன் சந்தித்த போது எடுத்த படம்.

**உள்ளே**
**வர்ணக்கலண்டர்**

## பிரதமர் ரணில் விரைவில் அமெரிக்கா பயணம்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரம சிங்க அமெரிக்கா செல்லவுள்ள தகா அமைச்சரவைத் தகவல் கள் தெரிவிக்கின்றன.

நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற நோர்வேயுடன்ான சமாதான முன்னெடுப்புக்கள் குறித்து அமெரிக்க அதிபருக்கு தெரியப் படுத்தவும், சமாதானத்திற்கு அமெரிக்காவின் ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளவுமே பிரதமர் அமெரிக்காவுக்கு செல்லவுள்ள தாக தெரியவருகிறது.

இதே வேளை விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சர் மெலிந்த மொறஹொட அண் மையில் அமெரிக்கா சென்று திரும்பியமை இங்கு குறிப்பி டத்தக்கது. (இ)

### புரிந்துணர்வு ஒப்பந்தத்துடன்

## நோர்வே சமாதானக் குழு பிரதமரைச் சந்தித்தது

(கொழும்பு)

இலங்கை அரசுக்கும் விடுத லைப்புலிகளுக்குமிடையே சமா தானப் பேச்சுவார்த்தையை முன் னெடுத்துச் செல்லும் நோக்கு டன் நேற்றுக் கொழும்பு வந்த நோர்வேயின் விசேட சமாதானக் குழு தன்னுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றையும் எடுத்து வந்துள்ளது.

ஒப்பந்த ஆவணங்களுடன் கொழும்பு வந்துள்ள இக் குழுவி னர் நேற்று இரவு 9.00 மணிக்கு பிரதமர் ரணிலைச் சந்தித்து பேச்சு நடத்தியுள்ள போதும் இதன் விபரமும் அவர்களால் எடுத்துவரப்பட்ட புரிந்துணர்வு

(12ம் பக்கம் பார்க்க)

## யாழ் மீனவர்களுக்கு ஆதரவாக

## மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம்



ச்சர் ஹெல் கீசன் சந்தித்த போது எடுத்த படம்.

## உள்ளே வர்ணக்கலண்டர்

இன்றைய நாளிதழுடன் நான்கு வர்ணக் கலண்டர் கேட்டு வாங்குங்கள்

## யாழ் மீனவர்களுக்கு ஆதரவாக மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம்

(மடடக்களப்பு)

யாழ் குடாநாட்டு மீனவர் களின் மறியற் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து இன்று ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடத்தப்படவுள்ளது.

மட்டக்ளப்பு மாவட்ட வெகு ஜன அமைப்புக்களின் ஒன்றியம் இதனை ஏற்பாடு செய்துள்ளது.

யாழ் குடாநாட்டு மீனவர்க ளின் மறியற் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிப்பதுடன், சிறை யில் அடைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்குமாறும், விடுதலைப் புலிகளின் தடையை நீக்குமாறு கோரியும் இப் பேரணி இடம் பெறவுள்ளது. (ம)

### அதிகாலை 4.30 மணி முதல் மாலை 6.30 மணி வரை மீன் பிடிக்கும் அனுமதி

# உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படும் வரை மீனவர்களின் மறியற் போராட்டம் தொடரும் !

## வடமராட்சி மீனவர் சங்கங்கள் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டு மீனவர்கள் தொழிலில் ஈடுபவதற்குரிய நேர ஒழுங்குதெளிவாக படையின ருக்கும் தமக்கும் தெரியப் படுத்தப்படும் வரை வடமராட்சி மீனவர்கள் சங்கங்கள் அறித் துள்ளன.

தொண்டமனாற்றுக்கும் பருத் தித்துறைக்கும் இடையிலான கடற்பகுதியில் தினமும் அதி காலை 4.30மணிமுதலில் மாலை 6.30மணிவரை மீன்பிடிக்க அனுமதிப்பதெனவும், அத்துடன் திங்கள்முதல் சனிக்கிழமை வரை கடலில் 500மீற்றர் தூரம் வரை சென்றும், ஞாயிற்றுக் கிழமைகளில் 1500மீற்றர் தூரம் வரைசென்றும் மீன்பிடிக் கலாம் என்றும் பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கி உள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இவ் அனுமதி தமிழ்க் கட்சி கூட்டமைப்பினர் நேற்று முன் தினம் பிரதமர் ரணில் விக்கிர மசிங்க, பாதுகாப்பமைச்சர் திலக் மாரப்பன மற்றும் முப் படைத்தளபதிகள் ஆகியோ ருடன் கொழும்பில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போது எடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்ட முடிவாகும்.

ஆனால் பலாலி படைத் தளத்தில் நேற்று முன்தினம் இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் முன்னிலையில் நடைபெற்ற மீனவர் மாநாட்டில், திக்கம் தொடக்கம் வல்வெட் டித்துறை சிதம்பராக் கல்லூரி வரையான கடற்பரப்பில், தின மும் அதிகாலை 4.00 மணி முதல் காலை 6.00 மணி வரை யும், பிற்பகல் 3.00 மணிமுதல் மாலை 6.00 ம்ணி வரையும் மீன்பிடிக்க அனுமதிப்பதென்ற முடிவு அறிவிக்கப்பட்டது.

இந் நிலையில் இரு வேறுபட்ட முடிவுகள் அறிவிக்கப்பட்டுள் ளதால் குழப்பமடைந்துள்ள மீனவர்கள், மீன்பிடிக்க அனும திக்கப்படும் நேர ஒழுங்கு தொ டர்பான அறிவிப்பு தெளிவாக வெளியிடப்படும் வரை தமது போராட்டம் தொடரும் என்று தெரிவித்துள்ளனர்.

இதேவேளை மீனவர் போராட் டம் குறித்து ரெலோ பிரமுகரும், தமிழ்க் கூட்டமைப்பு பாராளு மன்ற உறுப்பினருமான என்.கே. சிவாஜிலிங்கம், லண்டன் பி.பி.சிக்கு நேற்றிரவு வழங்கிய பேட்டியில்,

மீனவர் போராட்டம் தொடர் பாக கொழும்பு, யாழ்ப்பபாணம் ஆகிய இரு இடங்களில் எடுக் கப்பட் செய்திகள் முரணான வையாக உள்ளன. இதில் சரியான முடிவெதுவென்று அரசு மீனவர்களுக்கும் படையின ருக்கும் தெளிவுபடுத்தும் வரை மீனவர் போராட்டம் தொடரும்

(12ம் பக்கம் பார்க்க)

## யுத்த நிறுத்தத்தை கண்காணிக்க ஐந்து நாடுகள்

(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே இடம் பெறவுள்ள நிரந்தர யுத்த நிறுத் தத்தை 5 நாடுகள் கண்காணிப் பதற்கு அரசும் விடுதலைப் புலிகளும் இணங்கியுள்ளன.

நோர்வே, சுவீடன், டென் மார்க், ஐஸ்லாந், பின்லாந், ஆகிய ஐந்து நாடுகளின் குழுக் களும் உள்நாட்டுக் குழு ஒன்றும் யுத்த நிறுத்தத்தை கண்காணிக்கவுள்ளன.

(12ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 9ம் ஆண்டு நினைவலைகள்

08.02.2002



## அமரர்
## இ.ச.பேரம்பலம் அவர்கள்
## (வாரிவளவு, காரைநகர்)

காரைநகர் வாரிவளவு தனில் தோன்றி
வளமுடன் வாழ வென யாழ் நகரில் சங்கமித்து
மனிதருள் மாணிக்கமாம் புகழ் மிக்க பெருந்தகையே!
**E.S.P** என நாமஞ்சூட்டி பண்பால் வருவோர் யாவரையும்
அன்புடன் ஆதரவளித்தவரே!
எம்மை எல்லாம் அன்புடன்
பேணிக்காத்து ஒளிவிளக்காய்

அன்புடன் ஆதரவளித்தவரே!
எம்மை எல்லாம் அன்புடன்
பேணிக்காத்து ஒளிவிளக்காய்
திகழ்ந்து எம்மை நல்வழி நடாத்தி
வையத்துள் வாழ அன்புவழி காட்டி ஆதரவு தந்து
இன்பமுடன் வாழவைத்த தந்தையே!

யாழ்நகரிலும் தலைநகரிலும் நேர்மையுடன்
தொழில் செய்திடவும்
சென்ற இடமெல்லாம் சிறப்புடன் வாழ்ந்திட வழியமைத்தவரே!
விநாயகப் பெருமான் கைகொடுக்க
கனவும் நினைவும் கற்பனையின் விந்தைபுலனாய் ஊற்றெடுக்க
விளைந்த கோயில் என்னும் மணிஓசை தனில்
வாழ்ந்திட தங்கள் பிறப்பின் பயனென்றே எண்ணி வணங்குகின்றோம் ஐயாவே!
இன்று வானுறையும் தெய்வமாகிவிட்ட எம் தந்தையே!
இன்று 9ம் ஆண்டு நினைவினை எம் மணி ஓசை
இல்லத்தில் சுடர் ஏற்றி தூபமிட்டு
எதிலும் ஓங்கும் உன்தொனியாய் எழுந்து நிற்போம் எம் தந்தையே!

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

**குடும்பத்தினர்.**
**"மணிஓசை"**
**383. கோவில் வீதி,**
**நல்லூர்.**

**இ.ச. பேரம்பலம் சக நிறுவனம்**
**50, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## சிறுவிளம்பரம்

### வாடகைக்கு

குமரன் ஸ்ரோஸ் பலசரக்கு கடை வாடகைக்கு விடப்படும் தொடர்பு:- வி.பானு 195B கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (கி-3503)

### வகுப்புக்கள்

தரம் 6- O/L வரை தமிழ், ஆங்கிலம், கணிதம்சோ சியல் ஸ்ரடி, வர்த்தகம், விஞ்ஞானம் (ஆங்கிலத்தில் கூடிய கவனம கொடுக்கப்படும்) அனுமதிக்கு ந. விக்னேஸ்வரன்ஆச்சாரி 426(302)காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம். (4461)


# இந்தியாவின் பிராந்திய ஆட்சி முறை இலங்கையிலும் அவசியமாகும்

## சென்னை விகாராதிபதி பேட்டி

(சென்னை)

பிரிவு படாத இலங்கையில் இந்தியாவில் உள்ளது போன்ற பிராந்திய ஆட்சிமுறையை அமுல் செய்து இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டுமென்று சென்னை மகாபோதி விகாரையின் பிரதி அதிபதி சங்கைக்குரிய முதலிகுளி ரத்தின சோதிதேரர் கூறியுள்ளார்.

இலங்கையின் 54வது சுதந்திர தின வைபவத்தை யொட்டி கொழும்பு பத்திரிகை ஒன்றிற்குப் பேட்டி அளித்த ரத்தின சோதிதேரர் மேலும் கூறியிருப்பதாவது, இலங்கையில் இனப்பிரச்சினைகாரணமாக இடம்பெற்றுவரும் யுத்தத்தினால் மக்களின் அன்றாடவாழ்வில் சீர்குலைவு ஏற்பட்டுள்ளது.

தமிழ் நாட்டில் ஹிந்திமொழியை எதிர்ப்பவர்கள் கூட ஒரே இந்தியா என்றசிந்தனையிலேயே வாழ்ந்துவருகிறார்கள். ஈழத்தமிழ்மக்களின் பிரச்சினைக்கு அவர்கள் கௌரவமாக ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வினை வழங்க வேண்டும்.

இந்தியாவில் நடைமுறையில்இருந்துவரும் பிராந்திய ஆட்சிமுறையானது இந்தியாவின அபிவிருத்திக்குப் பெரிதும் உதவியுள்ளது எனவே பிராந்திய ஆட்சி முறை ய இலங்கையிலும் அமுல்செய்து சகல இனத்தவர்களும் ஒன்றுபட்டு செயல்படும்து நிலையை ஏற்படுத்த வேண்டும் என்றும் ரத்தினசோதி தேரர் அப்பேட்டியில் தெரிவித்துள்ளார். (வ)

## அபிவிருத்தித் தொண்டர்களுக்கு எழுத்துப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

பளை பிரதேச செயலக பிரிவில் பயிற்சி பெற்ற முதலாம் கட்ட அபிவிருத்தித் தொண்டர்களுக்கு, பயிற்சி நெறிச் சான்றிதழ் வழங்கவதற்கான எழுத்துப் பரீட்சைஎதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப..2.00மணிக்குபுலோலியில்இயங்கும் பளை மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் அனைத்துப் பயிற்சியாளர்களையும், போதனாசிரியர்களையும், அபிவிருத்தி பரிசோதகர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு பளை பிரதேச செயலர் எஸ். புத்திசிகாமணி அறிவித்துள்ளார். (செ)

## புலிகளின் பெயரைக் கூறி கப்பம் பெற முயன்றவர் மக்களால் மடக்கிப் பிடிப்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு பெரிய கல்லாறில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பெயரைப் பயன்படுத்தி கப்பம் பெற முயன்ற நபர் ஒருவரை பொது மக்கள் மடக்கிப் பிடித்த சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.

பத்துப் பேரைக் கொண்ட குழு வொன்று இம் முயற்சியில் ஈடுபட்ட போதும் ஒருவரைத் தவிர ஏனையோர் தப்பியோடிவிட்டனர்.

இதற்கு முன்னரும் இவ்வாறு கப்பம்பெற முயன்ற இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறை, தமது அமைப்பின் பெயரைப் பயன்படுத்தி சிலர் கப்பம் பெற முயல்கிறார்கள் என குற்றஞ் சுமத்தி அறிக்கை ஒன்றுவெளியிட்டிருந்தமையும்குறிப்பிடத்தக்கது. (செ)

## இரு விமானப்படை அதிகாரிகளுக்கு ஒன்பது வருட சிறைத் தண்டனை

(கொழும்பு)

சண்டேரைம்ஸ் பத்திரிகையின் பாதுகாப்புச் செய்தியாளர் இக்பால் அத்தாசுக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்த விமானப்படை அதிகாரிகள் இருவருக்கு கொழும்புமேல் நீதிமன்றம் நேற்று ஒன்பது வருடசிறைத் தண்டனையும் தலா பத்தாயிரம்ரூபா அபராதத்தையும் விதித்துள்ளது.

விமானப்படையில் நிலவிய ஊழல் துஷ்பிரயோகங்களை கட்டுரையாக வரைந்தமைக்காகவே இவர் 1998ம்ஆண்டு நுகேகொடையிலுள்ள இல்லத்தில் வைத்து அச்சுறுத்தப்பட்டதாக சட்டமா அதிபரிடம் முறையிட்டதை யடுத்து சட்டாஅதிபர்மனுவொன்றை கொழும்புமேல்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார்.

இம்மனுவைவிசாரணைக்கு எடுத்துக்கொண்ட கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பயப்பிட்டிய பத்திரிகையாளர் ஒருவர் சமுகத்தில் குற்றச்செயலில் ஈடுபடும் எவரையும் விமர்சிக்கும் அதிகாரம் உடையவர் எனவே அவரது பணிக்கு இடையூறாக அச்சுறுத்தலாக யாரும் இருக்கக் கூடாதென தெரிவித்துள்ளார்.

தண்டனை வழங்கப்பட்ட ருக்மன் கேரத் மற்றும்சுஜிவ கன்னங்கர ஆகியஇருவரும் முன்னாள் விமானப் படைத் தளபதிஏயர்வைமார்சல் ஒலிவர் ரணசிங்காவின் மெய்பாது காவலர்கள் என்பதும் இங்குகுறிப்பிடத் தக்கது. (இ-4)

## பிரதேச சபை தலைவரின் கோரிக்கை படையினரால் நிராகரிப்பு

(ஏழாலை)

மகாஜனாக் கல்லூரிக்கு மாணவர்கள் தெல்லிப்பழைச் சந்திஊடாக பஸ்ஸில்சென்று வருவதற்கு அனுமதிவழங்குமாறு வலிவடக்கு பிரதேச சபை விடுத்த கோரிக்கையை பலாலி படை அதிகாரிகள் நிராகரித்துள்ளனர்.

மேற்படி பாடசாலை மாணவர்கள் தற்பொழுது அளவெட்டி அம்பனை ஊடாகவே சென்றுவருகின்றனர்.

இப்பகுதிகளூடாகச் செல்வதில் உள்ள சிரமங்களைக் குறிப்பிட்டு தெல்லிப்பழைச் சந்திஊடாக பஸ்செல்வதற்கு அனுமதிக்குமாறு வலிவடக்கு பிரதேசசபைத் தலைவர் பலாலி படைஅதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

எனினும் பாதுகாப்புக் காரணங்களைச் சுட்டிக்காட்டிய படை அதிகாரிகள் மேற்படி கோரிக்கையை நிராகரித்துள்ளனர். (செ-12)

## உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் இம்முறை கொழும்பில் நடத்த முடிவு

(கொழும்பு)

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் இம்முறை முதல் முறையாக கொழும்பில் நடைபெறுவதற்கு உதவிவழங்கும் நாடுகள் சம்மதம் தெரிவித்துள்ளன.

இக் கூட்டம் இவ் வருடம் மேமாதம் கொழும்பில்நடைபெறவுள்ளது. மே மாதத்தில் கூட்டம் நடத்துவதற்கான திகதி இன்னமும் நிர்ணயிக்கப்படவில்லை

இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகள் கூட்டம் வழமையாக பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நடைபெறுவது வழக்கம். ஆனால் இம்முறை முதற்தடவையாக கொழும்பில் நடைபெறவிருப்பது குறிப்பிடத்தக்கது. (வ-2)

## இலவச பாடப்புத்தகத்திலுள்ள வழுக்களைக் கண்டறிய குழு அமைக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டுக்கு விநியோகிக்கப்படும் இலவசபாட புத்தகங்களில் காணப்படும் எழுத்துப் பிழைகள், கருத்துப் பிழைகள் மற்றும் ஏனைய குறைபாடுகள் தொடர்பாக ஆராய்வதற்கு குழு ஒன்று விரைவில் நியமிக்கப்படவுள்ளதாக மேலதிக மாகாண கல்விப் பணிமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேலும் இலவச பாடப்புத்தக சீருடை விநியோகத்தை கண்காணிக்கும் பொருட்டு கொழும்பிலிருந்து யாழ் வருகை தந்துள்ள கல்வி வெளியீட்டுத் திணைக்கள அதிகாரிகள் பாடப்புத்தகங்களிலுள்ள குறைபாடுகளை மிக விரைவில் தமக்கு அறியத்தருமாறு கேட்டுக் கொண்டதற்கிணங்க இக் குழு நியமிக்கப்படவுள்ளது. (உ)

## உலகில் சிறந்த கிரிக்கெட் வீரராக முத்தையா முரளிதரன்

### லண்டன் இணையத்தளம் கணிப்பு

(லண்டன்)

லண்டனில் இருந்து வெளியாகும் கிரிக்கெட் நெற்பற், கொம் என்னும் இணையத் தளம்சிறந்தகிரிக்கெட்வீரராக இலங்கை அணியின் சுழல் பந்து வீச்சாளர் முத்தையாமுரளிதரனைத் தெரிவு செய்துள்ளது.

இது தொடர்பாக சர்வதேச ரீதியில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் அவருக்கு ஒன்பதாயிரத்து 308 வாக்குகள் கிடைத்துள்ளன.

இக்கருத்துக் கணிப்பின் போது இந்தியாவின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் இரண்டாம் இடத்தையும்,

அவுஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர் மகூர் கைய்டன் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர். (செ)

## யாழ். மத்தியகல்லூரியில் இலவச சீருடை; பாட நூால் வழங்கும் வைபவம் நாளை

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவர்களுக்குரிய இலவசப் பாடநூல் மற்றும் சீருடைத் துணி ஆகியவற்றை யாழ் குடா நாட்டு பாடசாலைகளுக்கு வைபவ ரீதியாகஒப்படைக்கும் நிகழ்வு நாளை யாழ் மத்திய கல்லூரியில் அதிபர் க. இராசதுரை தலைமையில் நடைபெறவுள்ளது.

காலை 9மணிக்கு நடைபெறும் இந் நிகழ்வில்கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்துள்ள கல்வி வெளியீட்டுத் திணைக்கள பிரதி ஆணையாளர் என். ஹாஜி முகமட் பிரதம விருந்தினராகவும் யாழ் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ். வரதராஜா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (இ)

## சமாதானம் ஏற்பட்டால் காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை சீரமைப்பு

(கொழும்பு)

நாட்டில் சமாதானம் ஏற்பட்டால் காங்கேசன்துறை சீமெந்து தொழிற் சாலையை திருத்தியமைத்து சீமெந்து உற்பத்தி செய்யமுடியும். சாத்தியமானால் அத்துடன் அதனை வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யலாம் என்று ஹொல்கிம் சீமெந்து நிறுவனத்தின் தலைவர் மணிலால் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

புத்தளம் சீமெந்து நிறுவனம் கடந்த ஜனவரி 25ஆம் திகதி தொடக்கம் ஹொல்கிம் லங்கா லிமிற்றெட் என்ற பெயருடன்இயங்கத் தொடங்கியுள்ளது. இதனை அறிவிப்பதற்காக கூட்டப்பட்ட செய்தியாளர் மகாநாட்டில்லேயே அவர் இத் தகவலைவெளியிட்டார்.

சுவிற்சர்லாந்தைச் சேர்ந்த ஹோல்டர் பாங்க் நிறுவனத்தின் ஒரு பகுதியாக புத்தளம் சீமெந்து நிறுவனம் இயங்கி வந்தது. ஹோல்டர் பாங்க் நிறுவனம் தற்போது ஹொல்கிம் என்ற பெயரை மாற்றியுள்ளதால் புத்தளம் சீமெந்து நிறுவனமும் தனது பெயரை மாற்றியுள்ளது. (எ)

## மனித மேம்பாட்டு கல்வி நிலையம்

(கோப்பாய்)

யாழ். பருத்தித்துறை வீதியில் கோப்பாய் உப பிரதேசசபை அலுவலகத்திற்கு அண்மையில் சத்ய சாயி மனிதமேம்பாட்டுக் கல்வி நிலையம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையத்தில் வலயக் கல்விப் பணிமனையின் அனுமதியுடன் பாடசாலைகளில் தரம் 1, 2, 3, இல் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான மேம்பாட்டுக் கல்வித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

சனி, ஞாயிறு தினங்களில் 5வாரங்களுக்கு இப் பயிற்சி வழங்கப்பட்டு இறுதியில் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. (உ-79)

## எரிபொருள் தட்டுப்பாடு மூன்று தினங்களில் நீங்கும்

### ஈ.பி டி.பியிடம்அமைச்சர் கரு. உறுதி

(கொழும்பு)

ஈ.பி.டி.பியின் செயளாளர் நாயகமும் யாழ் மாவட்ட பாரராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான குழுவினர் நேற்று எரிபொருள் மின்சக்தி அமைச்சர் கரு ஜெயசூரியாவை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம் பெற்ற இச்சந்திப்பில் யாழ் குடாநாட்டில் நிலவும் எரிபொருள் பற்றாக்குறையை நீக்கி அங்கு தாராளமாக எரிபொருள்விநியோகிக்கப்பட ஏற்பாடு செய்யுமாறு அமைச்சரிடம் தூதுக் குழுவினர் வலியுறுத்தியுளளனர்.

மூன்று தினங்களுக்குள் எரிபொருள விநியோகத்தைச் சீராச்கி யாழ் குடாவில் எரிபொருள பறறாக் குறையை நீக்குவதாக அமைச்சர் கரு ஜெயசூரியா தங்களிடம் உறுதியளித்ததாக ஈ.பி.டி.பியின் முன்னாள் எம்.பி தவராஜா தெரிவித்துள்ளார்.

இதேவேளை அமைச்சருடனான சந்திப்பில் முன்னாள் எம்.பிகளான தவராஜா கலாநிதி விக்னேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். இ

## கடல் வலயத் தடைக்கு எதிராக

# விஸ்வரூபம் எடுத்த மீனவர் போராட்டம்

# சாதுரியமாக முறியடிக்கப்பட்டது

## சமாசப் பிரதிநிதிகள் விலைபோனரா?

யாழ் குடாக் கடலில் மீன் பிடிப்பதற்கு அரசு விதித்த தடையினால் குடா நாட்டு மீனவர்கள் பெரும் பாதிப் படைந்துள்ளனர். இதனால் அவர்களது சீவனோபாயம் பாதிக்கப்பட்டுள்ளது.

கடற்றொழிலில் ஈடுபட்டு வளத்தோடு வாழ்ந்த கடற் றொழிலாளர்கள் இன்று வறுமையின் எல்லைக்குத் தளளப் பட்டுள்ளனர். இதனால் அவர்களின் வாழ்க்கை கடன் சுமையால் கனத்துப்போயுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகாகுமார துங்கா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சியில் கடல் வலயத் தடைச் சட்டத்தை நீக்கக் கோரி மீனவர்கள ஊர்வலம் வைப்பதும் பின்னர் அதற்காக ஒருசில மணித்தியாலங்கள் தளர்த்தப்படுவதும் வழமையான சங்கதிகள்

படை அதிகாரிகள் மட்டத்தில் வழங்கப்படும் உத்தரவாதங்களை நம்பி கடலுக்குச் சென்ற மீனவர்கள் கடற்படையினரால் தாக்கப் படுவதும் அவர்களின் உபகரணங்கள் கடலில் வீசப்படுவதும் வழமையானவையே.

தாக்கப்பட்டமைக்கு நீதி கேட்டால் வரையறுக்கப் வாழ்வாதாரப் பிரச்சினைக்கு பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியில் முடிவு கிடைக்காதென்பதற்காக மக்கள் நம்பிக்கையோடு சூரியனுக்கும், யானைக்கும் தங் தரப்பையும் படைத்தரப் பையும் மிரளவைத்தது யாழ் குடாநாட்டில் என்றுமில்லாதவாறு, சர்வ தேசத்தையும் ஈர்க்கக்கூடிய போரரட்டம் மீனவர்காளல் நடந்தேறப் போவதைஉணர்ந்துகொண்ட அரசியல் வாதிகளும் படைத் தரப்பும் அவசர அவசரமாக களத்தில் இறங்கினர். எட்டு நாட்களாக மறியல் போராட்டம் நாடைபெற்றுக் கொண் டிருந்த போது,

## குருஷேத்திரம்

பட்ட கடல எல்லையைத் தாண்டிச் சென்றுவிட்டார்கள. ஒதுக்கப்பட்ட நேரத்தை மீறிவிட்டார்கள் என உறுதிப் படுத்தப்படாத குற்றச்சாட்டுக்கள முன்வைக்கப்படும்.

### புதிய ஆட்சியில் நம்பிக்கை

குடாநாட்டு மீனவர்களின் கள வாக்குகளை அள்ளிப் போட்டனர். அவர்களின் எதிர்பார்ப்புக்கமைவாக சூரியனும், யானையும் யாழ் மாவட்டத்தில் வெற்றி பெற்றதோடு யானை ஆட்சிப்பீடத்திலும் அமர்ந்தது. ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசாரத்தின் போது தாம் ஆட்சி ஏற்ற மறுநாள் மீனவர்கள் தாம் விரும்பிய தூரம், உடல் அலுப்பில்லை எனில் விரும்பிய நேரம் கடலுக்குச் சென்று தொழிலில் ஈடுபடலாம் என்றும் கூறப்பட்டது இதனை மீனவர்களும் நம்பியிருந்தனர் ஆனால் ஏமாற்றமே மிஞ்சியது.

வாய்மூடி மௌனிகளாக இருந்த படைத்தரப்பு கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளைபலா லிக்குஅழைத்து

## விதுரன்

பேச்சு நடத்தியது இதற்கு முன்னதாக இந்துகலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் சமாசப்பிரதிநிதிகளை தனது இல்லத்தில் சந்தித்து பேச்சு நடத்தியதுடன் பலாலிச்சந்திப்புக்கும் ஏற்பாடுசெய்திருந்தார்.

### விடுதலைப் புலிகளின் யுத்தநிறுத்தம்

புதிய அரசுககு தமதுசமாதான நல்லெண்ண சமிஞ்ஞையை வெளிப்படுத்தும் நோக்கில் விடுதலைப்புலிகள் யுத்த நிறுத்தத்தை அறிவித்திருந்தனர்.

இதற்குப் பதிலாகஅரசும் போர் தவிர்ப்பை அறிவித்தது இநநிலையில் மீனவர்கள தமது மீனபிடித்தடை எடுபடுமென பூரணமாக நம்பியிருந்தனர். அவர்களது நம்பிக்கைக்கு அமைவாக மின்பிடித் தடைகுறித்துஆளும்கட்சியோ தமிழ்க கூட்டமைப்போகுரல் கொடுக்கவில்லை இதன் காரணமாக மீன்பிடித் தொழிலாளர்கள அனைவரும் ஒன்று சேர்ந்து கடற் றொழிலாளர் சமாத்தின் தலைமையில் யாழ்.செயலகம் முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

### அரசு மிரண்டது

மீனவர்களின் இப்போராட்டம் அவர்களின் பொறுமையையும், பலத்தையும் எடுத்துக்காட்டியது. அதேவேளை செயலகத்திறகு முன்பாக நடத்தும் மறியல் போராட்டத்திற்குத் தகுந்த பதில் கிடைக்காவிட்டால் படை முகாம்களுக்கு முன்னால் மறியல் போராட்டம் செய்து படையினரின் விநியோகத்தை வாகனங்களை தடை செய்து படையினரை முடக்கப் போவதாகவும் அறிவித்தல் விடப் பட்டது.இவ்வறிவித்தல் அரச

### சமாசப் பிரதிநிதிகள் ஏமாற்றப்பட்டனர்

மீன்பிடித்தடைமுற்றாக நீக்கப்பட்டு சுதந்திரமாக மீன் பிடிக்க அனுமதிக்கப்படும் வரை போராட்டம் தொடரும் என உணர்ச்சிபூர்வமாக உரத்துப் பேசி அப்பாவி கடற்றொழிலாளர் களுக்கு உஷாரையும் நம்பிக்கையையும் ஊட்டிய சமாசப் பிரதிநிதிகள் அமைச்சருடனும் படைத் தளபதிகளுடனும்குளிரூட்டப்பட்ட அறையினுள் இருந்து பேசிய போது சூடுதணிந்துஅர்ப்பத்தனமாக இரண்டு மணித்தியால மீன்படி நேரத்திற்கு கோயில்மாடு தலையாட்டியது போல் தலையாட்டி கைகொடுத்து வந்தனரெனில் அவர்கள செய்த நம்பிக்கைத்துரோகம் கொஞ்சமல்ல.

### மரத்துக் கீழ் காத்திருந்தனர்

எங்கள் சமாசத் தலைவர்கள் பேச்சு நடத்தச்சென்றுள்ளனர் அவர்களவெற்றியோடு திரும்பி வருவார்கள் என யாழ் செயலக முன்றலில்தரையில் உட்கார்ந்து கற்பனையோடு காத்திருந்த மீனவர்களுக்கு சமாசப் பிரதிநிதிகளின் அறிவிப்பு பேரிடியாக இருந்தது இதனால் லஞ்சம் வாங்கிவிட்டாஇரண்டுமணித் தியால மீன்பிடித் தடைக்கு உடன்பட்டீர்கள் என சமாசப் பிரதிநிதிகளைப் பார்த்து மீனவர்கள் கேள்விக்கு மேல் கேள்வி தொடுத்தனர் என்ன கூற முடியும்? சமாசப் பிரதிநிதிகள் விலை போய்விட்டதாக மீனவர்களால் எடுக்கப் பட்ட முடிவை மாற்றுவது எப்படி?

### மீனவர் ஒற்றுமை உடைந்தது

ஒற்றுமையாக நடத்தப் பட்ட மீனவர் போராட்டம் விஸ்வரூபமெடுத்திருப்பின் மீன்பிடித் தடை முற்றாக நீக்கபபட்டிருக்கும் இது சர்வ நிச்சயம் ஆனால் அரச தரப்பு மிகச் சாதுரியமாக சமாசப் பிரதிநிகளைமடக்கிபிடித்து மீனவர்களின் ஒற்றுமையைக் குலைத்துவிட்டது.இது புதிய அரசுக்கும், படைத் தரப்புக் கும் கிடைத்தமாபெரும்வெற்றியாகும்.

மீனவர்களின்இறுக்கமான- உறுதியான ஒற்றுமையையும், போராட்ட உணர்வையும் உடைத்தவர்கள் சமாசப் பிரதிநிதிகள் என்பது ஜீரணிக்க முடியாத உண்மை. அதே வேளை அரச தரப்பின் முறியடிப்பு நடவடிக்கைகளுக்கு யாழ் மாவட்ட அரச சார்பற்ற அமைப்புகளின் ஒன்றியமும் காரணம் என்பது போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மீனவர் களின் கருத்தாகும் என்பதை இவ்விடத்தில் கூறுவது உண்மையை மறைக்காத செயல் என்றே எண்ண வேண்டும்.

### முரண்பட்ட முடிவுகள்

மீன்பிடிப்பதற்கான நேரம் பலாலி படைத்தரப்பில் எடுக் கப்பட்ட முடிவின் பிரகாரம் அதிகாலை 4 மணி முதல் காலை 6 மணிவரை எனவும் பிற்பகல் 3மணிமுதல் மாலை 6மணிவரை எனவும் அறிவிக் கப்பட்டிருந்தது.ஆனால் கூட்டமைப்பு எம்பிகள் பிரதமருடன் சந்தித்துப் பேசியதன் பிரகாரம் அதிகாலை4.30 மணிமுதல் மாலை 6.30 மணிவரைமீன்பிடிக்கலாமென அறிவிக்கப் பட்டுளளது இந்த இரண்டு முரண்பட்ட முடிவுளுக்குள் எதுசரிஎன்பது தெரியா விடினும் அரசின் கட்டுப் பாட்டில் படைத்தரப்பு இல்லை என்பது மட்டும் புரிகிறது

எதுவாயினும்காலாகாலமாக யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் வாழ்வில் ஒளி வீசவேண்டுமாயின் மீன்பிடித் தடை முற்றாக நீக்கப்படுவது மிகமிக அவசியமாகும்.

இடைக்கால முடிவுகள் மீண்டும் துன்பத்திற்கே வழி வகுக்கும் இதனைப் புரிந்து கொண்டு மீனவசமாசங்கள மீண்டும் ஒன்றுசேர்வது காலத்தின் தேவையாகும்.

## மண்ணெண்ணெய்...

(11 ஆம பககத தொடர்ச்சி)

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள மூலமான இந்த எண்ணெய் விநியோகத்தின் போது கூட்டுறவுச் சங்கங்கள சீரான விநியோக முறையை மேற்கொளள வில்லை என பாவனையாளர்கள மத்தியில் அதிருப்திநிலவிய அதேவேளை தனியார் மண்ணெண்ணை விற்பனையாளர்கள மண்ணெண்ணையை லீற்றர் 70 ரூபாவுக்கு மேல் விற்பனை செய்து வருகின்றனர்.

இந்நிலையில் மண்ணெண்ணையை விற்பனை செய்வதற்கு அங்கீகாரம் பெறாதவர்களின் கறுப்புச்சந்தை வியாபாரத்தை கட்டுப்படுத்தும் முகமாக யாழ்.மாவட்ட நீதிவான் இ. த. விக்கினராஜா அவர்களின உத்தரவின்பேரில் யாழ் செயலக விலைக்கட்டுப்பாட்டதிகாரிகள பொலிசாரின் உதவியுடன் திடீர் வேட்டையில் இறங்கிஇருந்தனர்.

## தமிழன்

இதனையடுத்து கொள்ளை லாபம் அடித்த திரைமறைவு வியாபாரிகளுகக்கு ஆப்பு வைத்தால்போல குடாநாட்டில் உளள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின மூலம் முறையே ஓரே அளவின தான விநியோகத்தை யாழ்செயலகம் வடபிராந்தியப் பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் ஆலோசனையுடன் மேற்கொணடது.

இந்நிலையில்2002ம்ஆண்டு ஜனவரி மாதம்முதல் மணெணண்ணை விநியோகத்தை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள மூலம் மேறகொளள ஏற்பாடாக இருந்தது.

2002ம் ஆணடுஜனவரிமாதம் வரைவடபிராந்திய பெற்றோலியக் கூட்டுத் தாபனம் தனது முகவர்களுக்கு காங்கேசன் துறையில் உளள எரிபொருள களஞ்சியத்தில் இருந்து 9லட்சத்து 76ஆயிரத்து 800லீற்றர் மண்ணெண்ணை விநியோகம் செய்திருந்தது இதில் யாழ்மாவட்டத்தில் உளள 23பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 7லட்சத்து 49ஆயிரத்து200 லீற்றர் மண்ணெண்ணையை விநியோகம் செய்துளளது.

இதன்படி குடும்பம் ஒன்றுக்கு 4 லீற்றர் மண்ணெண்ணையை வழங்குமாறு யாழ் செயலகம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உத்தரவிட்டிருந்தது.

இதன் பிரகாரம்கீழ்காணும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அவர்களிடம் உள்ள குடும்ப அட்டைகளின் எண்ணிக்கைக்கு அமைவாக மண்ணெண்ணை வழங்கப் பட்டது.

2002 ம் ஆண்டு ஜனவரி மாதம் 23 பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட மண்ணெண்ணை விபரம் வருமாறு;

| ப.நோ.கூ. சங்கம | மண்ணெண்ணெய் லீற்றர் |
|---|---|
| அச்சுவேலி-- | 46200 |
| அளவெட்டி-- | 36300 |
| சங்கானை-- | 46200 |
| சாவகச்சேரி-- | 29700 |
| சுன்னாகம-- | 46200 |
| நெடுந்தீவு-- | ------ |
| யாழ்பபாணம்-- | 49600 |
| கைதடி-- | 29700 |
| காரைநகர்-- | 13200 |
| ஊர்காவற்றுறை- | 13200 |
| கொடிகாமம-- | 9900 |
| நீர்வேலி-- | 49500 |
| மானிப்பாய்-- | 39600 |
| நலலூர்-- | 49500 |
| மருதனார்மடம்-- | 39600 |
| பளை-- | 16500 |
| பண்டத்தரிப்பு- | 39600 |
| பருத்தித்துறை- | 39600 |
| புலோலி-- | 46200 |
| அச்சுவேலி(புத்தூர்) | 3300 |
| புங்குடுதீவு-- | 9900 |
| நெல்லியடி-- | 46200 |
| உடுபபிட்டி-- | 36300 |
| வேலணை-- | 13200 |
| | (749200) |

இப் புளளிவிபரங்களின் அடிபபடையில மணமெண்ணை விநியோகத்தில் பல நோககுக கூட்டுறவுச் சங்கங்கள ஓரே தன்மையான போககைக் கடைப்பிடிக்க வில்லை.

சில சங்கங்கள தமது தீர்மானத்தின்படியும் சில சங்கங்கள யாழ் செயலக தீர்மானத்தினபடியும் 4 லீற்றர் 2 லீற்றர் ஒரு லீற்றர் என வழங்கியுளளதாக செயலகத்திற்கு புகார் செய்துளள நிலையில மண்மெணணை விநியோகத்தை கூட்டுறவுச் சங்கங்களுடன் மட்டுப்படுத்தாமல் மணணெண்ணைக்கப்பல் காங்கேசனதுறை வந்தடைந்ததும் தனியார் முகவர்களுக்கும் விநியோகம் செய்து பாவனையாளர்களுக்குத் தாராளமான விநியோகத்தை மேற்கொள்ளவுளளதாக யாழ் செயலக உயர்நிலை அதிகாரிகள் தெரிவித்துளளனர்.

இதன் மூலம் தற்போது நடைபெறும் கறுப்புச்சந்தை வியாபாரமும் முடிவுக்குக் கொண்டுவரப்படும்.

## ஐ. தே. கட்சி அமைப்பாளர் இராஜினாமா

(நுவரெலியா)

ஐக்கிய தேசியக் கட்சியின் நுவரெலியா மாவட்டஅமைப் பாளர் நவீன் திஸநாயக்கா அமைப்பாளர் பதவியில் இருந்துஇராஜினாமாச் செய்துளளார்.

அமைச்சர் எஸ். பி. திஸ நாயக்காவுக்கும் நவீன் திஸ நாயக்காவிற்கும் இடையே அமைப்பாளர் பதவியில் ஏற் பட்ட தகராற்றை அடுத்தே அவர் அமைப்பாளர் பதவியை இராஜினாமாச் செய்துள்ள தாக ஐக்கியதேசியக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள் ளன. (வ)

## உங்கள் வலம்புரியில்

5ந்தர மாணவர்களுக்கான
புலமைப் பரீட்சை
மாதிரி வினாத்தாள்
எதிர்வரும்
13 - 02 - 2002 புதன்கிழமை முதல்
ஒவ்வொரு புதன்கிழமைகளிலும்
உங்கள் பிரதிகளுக்கு முந்துங்கள்.

குறிப்பு:-
மாணவர்களால் எழுதி அனுப்பப்படும் விடைகள் திருத்தப்பட்டு கூடியபுள்ளிகள் பெறும் மாணவர்களின் பெயர்கள் வலம் புரியில் பிரசுரிக்கப்படும்.

## இராசி பலன்

08-02-2002
((தை 26, வெள்ளி)
ஏகாதசி மு. ப 9.54 வரை
மூலம் மு. இ. 8.58 வரை
ராகுகாலம்-11.05-12.35
நல்லநேரம்-6.35-8.05
அமிர்தசித்தம்

**மேடம்**
சட்டுப்பாடு, பிரயாணம், தொழில்நன்மை, புதியதிருப்பம்.

**இடபம்**
உடல்வியாதி, காரியதாமதம், எதிர்பாராத பிரச்சினை, வாக்குப்பலிதம்.

**மிதுனம்**
உறவினர் சந்திப்பு, முயற்சி கைகூடும், குடும்பநன்மை' பொருள்சேர்க்கை.

**கடகம்**
முயற்சி கைகூடும், ஆரோக்கியமானநிலை, தொழில் விருத்தி, வசீகரம்.

**சிங்கம்**
குடும்பக்கவலை, காரிய ஜெயம், கீர்த்தி, தொழில் நன்மை.

**கன்னி**
உடல்சோர்வு, தாய்வழி உறவு, காரிய தாமதம், ரோகம்.

**துலாம்**
சகோதரர் உதவி, அந்நியர் சந்திப்பு, இனியசம்பவம், காரிய அனுகூலம்.

**விருச்சிகம்**
தொழில்விருத்தி, மனஸ்தாபம், காரியதாமதம், சகோதரர் உதவி.

**தனுசு**
நல்லமுயற்சி, சயனசுகம், கற்பனை மிகுதி, வியாபார மேன்மை.

**மகரம்**
அமைதிக்குறைவு, பிரயாண அலைச்சல், சுபகாரியச் செலவு, களஸ்திரசுகம்.

**கும்பம்**
பெருமையடைதல், முயற்சி கைகூடும், தனவரவு, தெய்வ தரிசனம்.

**மீனம்**
மனக்குழப்பம், தொழில் முன்னேற்றம், அரசஆதரவு, காரியநன்மை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

**வளவன்**

# தமிழ்ப் புலமைப் பாரம்பரியத்தில் சிறந்தவர்
# சிலரைப் பற்றித் தெரிந்து கொள்வது நன்று

இன்று யாழ். பல்கலைக்கழகப் புவியியற்றுறை மண்டபத்தில் இடம்பெறவிருக்கும் சிந்தனை அரங்கில் உரைஞராகப் பேராசிரியர் நா. சுப்பிரமணியனும், உரைக்கப்படுவோராக இலக்கண வித்தகர் மகாவித்துவான், பண்டிதர் இ. நமசிவாய தேசிகரும், பேராசிரியர் க. கைலாசபதியும் விளங்குகின்றனர். இவர்கள் பற்றிச் சுருக்கமான சில தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

### உரைஞர்
பேராசிரியர்
நா. சுப்பிரமணியன் (1942)

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலைமாணி (சிறப்பு தமிழ்), முதுமாணிப் பட்டங்களையும், யாழ். பல்கலைக்கழகத்தின் கலாநிதிப்பட்டத்தையும் ஈட்டியவர் ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம், இந்தியச் சிந்தனை மரபு, கைலாசபதி முதலாம் நூல்களின் ஆசிரியர். சிந்தனைத் தெளிவுடனும், நடுவுநிலையுடனும் ஆய்வு, திறனாய்வுகளைமேற்கொண்டு ஈழத்திலும், தமிழ் நாட்டிலும்தமக்கெனச்சிறந்ததோர் இடத்தினை வகிக்கும் நல்லறிஞர். யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறையிலே விரிவுரையாளர், முதுநிலை விரிவுரையாளர், பேராசிரியர் தமிழ்த்துறைத் தலைவர் ஆகிய பதவிகளை வகித்து இன்று ஓய்வு பெற்றுத் தமிழ் நாட்டிலே நிரந்தரமாக வதியப் போகின்றார். இவரின் காலத்துக்கு முந்திய ஓய்வு, யாழ். பல்கலைக் கழகத் தமிழ்த்துறையையும், ஈழத்துத் தமிழியல் வளர்ச்சியையும் பெருமளவு பின்னடைவுக்கு உள்ளாக்கும் என இவரை அறிந்தோர் கவல்கின்றனர்.

### உரைக்கப்படுவோர்
இலக்கணவித்தகர்,
மகாவித்துவான், பண்டிதர்
இ. நமசிவாயதேசிகர்
(1915-2000)

யாழ்ப்பாணத்தின் தமிழ்ப் புலமைப் பாரம்பரியம் மிக நீண்டது வலிவுடையது. இப் பாரம்பரியத்தின் தூண்களிலே ஒருவராய் விளங்கியவர் அமரர் நமசிவாயதேசிகர், சுன்னைக்குமாரசாமிப் புலவரின் நன்மாணாக்கரான மகாவித்துவான் சி. கணேசையரின் தலைசிறந்த மாணாக்கருள்ளே சிறப்பிடம் வகித்தவர். இலக்கணத்தில் துறைபோன இவரை யாழ். பல்கலைக்கழகம் இலக்கண வித்தகர் பட்டம் அளித்துக் கௌரவித்ததுயாழ்ஆரியதிராவிட பாஷாவிருத்திச் சங்கம் 'மகாவித்துவான்' பட்டம் வழங்கிக் கௌரவம்பெற்றது. பயிற்றப்பட்ட தமிழாசிரியர் மதுரைத் தமிழ்ப்பண்டிதர், சித்திர ஆசிரியச் சான்றிதழ் பெற்றவர், என்பன இவரின் கல்வித் தகைமைகள். இவை இவரின் வாழ்க்கை, தளம்பாமலும், சமூக அந்தஸ்துக் குறையாமலும் இவருக்குஉதவின. ஆனால்இவரின்ஆழ்ந்த தமிழ்ப் புலமையும், தருக்க ஞானமும் சைவசித்தாந்தப் பேரறிவும், நுண்ணறிவும் தமிழ்ப்புலமை உலகிலே 'தாரகை நடுவண் தண்மதியாய்' இவரைஒளிர வைத்தன. பெரியதொருபண்டிதமாணவ பரம்பரையைப் பெற்றஇவரின்சதாபிஷேகப் பெருவிழா 2000-03-19 ஆம் நாள் விமர்சையாக நடந்தேறியது. அன்று இவரின்கட்டுரைகளும் கவிதைகளும்தொகுக்கப்பட்டு 'வித்தகர் தரிசனம்' என்ற பெயரில் நூல்வடிவில் வெளியாயிற்று. இவர்தம் நயப்புரைகளின் தொகுப்பும் 'தேசிகம்' என்ற பெயரில் வெளிவந்தது. சமய, இலக்கண இலக்கியப் பணிகளோடு சமூகத்தோடிணைந்தும் பல சமூகப்பணிகளை ஆற்றி, 'சமாதான நீதிபதி' யாகவும் விளங்கிய இப்பேரறிஞர் 2000-09-11 அன்று தமிழகத்தில் பூதஉடல் விட்டுப் புகழ் உடம்பெய்தினார்.

**சொக்கன்**

பேராசிரியர் க. கைலாசபதி
(அமரர் 1933-1982)

மலேசியாவில் பிறந்து, யாழ்ப்பாணம் வந்து யாழ். இந்துக்கல்லூரியிலே இடைநிலைப்படிப்பை மேற்கொண்டகனகசபாபதி கைலாசபதி, றோயல் கல்லூரியிலே தமது உயர்கல்வியை மேற்கொண்டார். அங்கிருந்து பல்கலைக்கழகம் சென்று தமிழைச் சிறப்புப் பாடமாகக் கற்று முதல் வகுப்பில்தேர்ந்து, கலைமாணியானார். தொடர்ந்து ஐந்தாண்டுகள் வரை 'தினகரன்' பிரதம ஆசிரியராய் விளங்கி, நவீன இலக்கியத் துறையிலே பலசாதனைகள் புரிந்ததோடு, சிறந்ததோர் எழுத்தாளர்பரம்பரையையும் உருவாக்கினார். பின்புபேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளராகித் தமிழாய்விலே மிகத் தீவிரமாக ஈடுபட்டு இருமகாகவிகள், தமிழ்நாவல் இலக்கியம், இலக்கிய விமர்சனம் முதலாம் நூல்களை வெளியிட்டார். முதுமாணி பட்டத்தோடு பேர்மிங்காம் பல்கலைக்கழகம் சென்று, பேராசிரியர் தோம்சன் என்பவரின் மேற்பார்வையில் தமிழ் வீரயுகக் கவிதை ஆராய்ச்சியில் ஈடுபட்டுக் கலாநிதியாய்த்திரும்பி விரிவுரையாளராய்த் தொடர்ந்தார். இவரின் 'தமிழ் வீரயுகக்கவிதை' ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக வெளியீடாய் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. 1974 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகம் நிறுவப்பட்டபோது அதன் முதல் தலைவராய் அமர்ந்து அரும்பணிபுரிந்தார். தமிழ்ப் பேராசிரியருமானார். சிலகாலம் கலைப்பீடாதிபதியாயும் விளங்கியஇவரின் ஆய்வுத்திறமையும், விமர்சன ஆற்றலும், புதிய கண்ணோட்டமும் இவருக்கு உலக அறிஞரிடையே பெரும்புகழைத்தந்தன 1982 இல் தமது 49ஆவது வயதிலே பேராசிரியர் கைலாசபதி மறைந்தார். இவர்மறைவானது தமிழ் கூறும் நல்லுலகிற்குப் பேரிழப்பு என்பது இன்றும் உணரப்படுகின்றது. □

### இந்துசமயப் பேரவையின் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துசமயப் பேரவையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு ஏழாலையில் அமைந்துள்ள கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் இந்து சமயப்பேரவைத் தலைவர் சீ. விநாசித்தம்பிதலைமையில் நடை. பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப் படவுள்ளதால் அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(உ-5)

# வெளிநாட்டவர் அனுப்பும் பணம் பாதுகாப்பு நிதியில் சேர்ப்பு

(தென்மராட்சி)

வெளிநாடுகளில் இருந்து குடாநாட்டில் இருக்கும் உறவினர்களுக்கு கடிதங்களுடன் வைத்து அனுப்பப்படும் பண நோட்டுக்கள் உடைத்து எடுக்கப்பட்டு நாட்டின் பாதுகாப்பு நிதியில் சேர்க்கப்படுவதாகத் தெரியவருகின்றது.

இது தொடர்பாக மேலும் அறியப்படுவதாவது, வெளிநாடுகளில் இருந்து குடாநாட்டிலுள்ள உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் அனுப்பப்படும் வான்கடிதங்கள் பாதுகாப்பு கருதி உடைக்கப்பட்டே இங்கு விநியோகம் செய்யப்பட்டுவருகின்றன.

அண்மையில் நெதர்லாந்தில் இருந்து யாழ்ப்பாணத்திலுள்ள தபாலகம் ஒன்றில் பணியாற்றும் ஒரு ஊழியருக்கு இலங்கைப் பணத்தில் 5 ஆயிரம் ரூபா பெறுமதியான பண நோட்டு அனுப்பப்பட்டது.

ஆனால் அவருடைய கடிதம் உடைக்கப்பட்ட நிலையில் குறித்த பண நோட்டு இல்லாமலே விநியோகம் செய்யப்பட்டிருந்தது அதனுள் இருந்த கடிதத்தில் 5 ஆயிரம் ரூபா பெறுமதியான பண நோட்டு அனுப்பப்பட்ட விடயம் குறிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து குறித்த தபால் திணைக்கள ஊழியர் கொழும்பிலுள்ள திணைக்களத்தின் உயர் அதிகாரிகளுக்கு முறைப்பாடு செய்திருந்தார். அவரது முறைப்பாடு தொடர்பாக அங்கிருந்து தெரிவிக்கப்பட்டதாவது.

''கடிதங்களுள் பண நோட்டுக்கள் வைத்து அனுப்புவது சட்டப் பிரகாரம் குற்றமாகும்· எனவே தங்களுக்கு அனுப்பப்பட்ட கடிதத்துடன் காணப்பட்ட பண நோட்டு நாட்டின் பாதுகாப்பு நிதியில் சேர்க்கப்பட்டுள்ளது'' என்பதாகும்.

அனுப்பப்படும் கடிதங்கள் முகவரியாளர் தவிர்ந்த ஏனையவர்களால் உடைக்கப்படுவது சர்வதேச தபால் சட்டப் பிரகாரம் மனித உரிமை மீறும் செயலாகும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

(செ-5,77)

### மீண்டும் நியமிப்பு

(வண்ணார்பண்ணை)

காரைநகர் சாலை முகாமையாளராகப் பணியாற்றி கடந்த மாதம் இடமாற்றம் வழங்கப்பட்ட எஸ். உருத்திர சுந்தரம் மீண்டும் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். (உ-5, 109)

# தமிழீழ விடுதலைப் புலிகள் ஆட்பலத்தை பெருக்கவில்லை; வழமையான பயிற்சிகளில் மாத்திரமே ஈடுபடுகின்றனர்

### திலக் மாரப்பன பேட்டி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் தமது ஆட்பலத்தைப் பெருக்கும் வகையான நடவடிக்கைகள் எதிலும் ஈடுபடவில்லை.

ஆங்கிலப் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியொன்றில் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தத்திற்கு ஆயத்தமாகும் வகையில் விடுதலைப் புலிகள் தீவிர பயிற்சிகளிலோ அல்லது ஆட்களைச் சேர்க்கும் பணியிலோ ஈடுபடவில்லை.

மாறாக தமது வழமையான பயிற்சிநடவடிக்கைகளிலேயே ஈடுபட்டு வருகின்றனர்.

உளவுப் பிரிவினரின் தகவல்கள் இதனை உறுதிப் படுத்துகின்றன என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் கூறுகையில், ஐக்கிய தேசிய முன்னணி அரசின் சமாதான முயற்சிகள் வெற்றி பெறும் என்பதில் நல்ல நம்பிக்கையுண்டு.

படையினரும் தமதுவழமையான பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர். இதனை நிறுத்த முடியாது என்று குறிப்பிட்டார்.

இதே வேளை விடுதலைப் புலிகள் போரை எதிர்கொள்ளும் வகையில் ஆட்களையும் ஆயுதங்களையும் பெருமளவில் திரட்டிதீவிரபயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்ற வீணான குற்றச்சாட்டுக்களுக்கு பாதுகாப்பு அமைச்சரின் பேட்டி தக்க பதில் அளிப்பதாக அரசியல்ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

(உ)

### விபரங்கள் சேகரிப்பு

(மானிப்பாய்)

காரைநகர் பற்றிய வரலாற்று நூல் ஒன்று வெளியிடத் தீர்மானிக்கப்பட்டதற்கிணங்கஇதற்கு காரைநகரின் ஆலய விபரங்கள், துறை சார்ந்த அறிஞர்கள், சாதனையாளர் பற்றிய விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

(உ-232)

# உயர்தரமாணவர்களுக்கான அறிவியல் வினாக்கள்

## இல -93 தொகுப்பு: ரீ. மயூரன்

### பொது அறிவு

1-5வரையான வினாக்களிற்கு தரப்பட்ட 4 விடைகளுள் சரியானதைத் தெரிவு செய்க.

1) உலக சிக்கன தினம் ஆண்டின் எந்தத்திகதியில் கொண்டாடப்படுகிறது?
1. ஒக்ரோபர் 27 2. ஒக்ரோபர் 19
3. மார்ச் 11 4. யூன் 04

2) இலங்கையில் கூட்டுறவுத் திணைக்களம் எவ்வாண்டில் ஆரம்பிக்கப்பட்டது?
1. 1950 2. 1940 3. 1930 4. 1920

3) பரம்பரை இயல் பற்றி முதலில் ஆராய்ந்தவர் யார்.
1. ஹென்றிடொனால்ட் 2. றோபேர்ட்பிறவுண்
3. றொபேர்ட்குக் 4. வீஸ்மென்

4) மிகவும் குளிர்ச்சியான கோள் எது?
1. புதன் 2. செவ்வாய்
3. புளூட்டோ 4. வியாழன்

5) கனடாவின் தேசிய விளையாட்டு எது?
1. கராத்தே 2. மல்யுத்தம்
3. கூடைப்பந்து 4. ஹொக்கி

சுருக்கமான விடை தருக.

6) தென்னாபிரிக்க நாடுகளில் ஏ.பி.சி நாடுகள் என அழைக்கப்படுவன?
7) தவளையின் கருக்கட்டல் நடைபெறும் ஊடகம்?
8) சொறிக்கரப்பான் நோய் எவ் விற்றமின்குறைபாட்டால் வருவது?
9) ஸ்புட்னிக்கை அனுப்பிய நாடு எது?
10) தேசிய அடையாள அட்டை வழங்கப்பட்ட ஆண்டெது?

பின்வருவனவற்றின் விரிவாக்கங்களை தருக.

11) WHO –
12) WMO – – –
13) IFC –
14) FAO – –
15) IDA – –

பின்வரும் நாடுகளது தலை நகரம் எது.

16) துருக்கி – –
17) கனடா – – – – –
18) கியூபா – – –
19) பிரேசில் – – –
20) உகண்டா – – –

### நுண்ணறிவு

21-30 வரையான வினாக்கள் பின்வரும் ஆங்கில நெடுங்கணக்கை அடிப்படையாகக் கொண்டு பதிலளிக்க வேண்டியவை.

A B C D E F G H I J K L M N O P Q R S T U V W X Y Z.

பின்வரும் வினாக்களில் அடுத்து வரும் எழுத்தினை கண்டறிந்து புள்ளிக் கோட்டில் எழுதுக.

21) E, G, I, K, –
22) N, M, O, L, P, K, Q, – – – – –
23) Z, B, Y, D, X, F, W, – – –
24) B, D, G, K, P, V – – –
25) AZ, AAY, AAX, AAW, AA– –
26) BBD, CCF, EE
27) Z, W, T, Q,
28) A, B, B, D, C, F, D,
29) A, Z, B, Y, C, X, D, – –
30) (AM), (BO), (CQ), (DS), ( – )

'தென்றல் சஞ்சிகை' எனும் சொற்றொடர் '+ ×○÷ ● ⌐' எனும் குறியீட்டால் குறிக்கப்படுகிறது. பின்வரும் குறியீட்டை சொல்லாக்கம் செய்க.

31) ⌐□●÷ = – –
32) ○□ – = – –
33) ●□ – = –

கீழ்தரப்பட்டுள்ள குறியீடுகளுடன் விரும்பிய ஒரு உயிர்மெய் எழுத்தை மட்டும் கீறிட்ட இடத்தில் பாவித்து கருத்துள்ள சொல்லை உருவாக்குக.

34) + – – ÷
35) – ÷
36) ● ÷ –
37) ● × – ÷

கீழ் உள்ள சமன்பாடுகளில உள்ள பெட்டிகளினுள் தேவையான கணிதக் குறியீட்டினை பாவித்து சமன்பாட்டை உண்மையாக்குக.

38) 6 □ 6 □ 6 = 6
39) 5 □ 5 □ 5 = 20
40) 12 □ 5 □ 4 = 28

குறிப்பு:- விடைகளை வேறு தாளில் எழுதி அனுப்பவும், இதற்கான விடைகளை 13.02.2002 இற்கு முன் எமக்கு கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவும்.

# மட்டக்களப்பில் இன்று அரசியல்கைதிகளைவிடுவிக்கக்கோரி ஹர்த்தால் அனுஷ்டிக்க அழைப்பு

(கொழும்பு)
பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ்க் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு கோரி இன்று மட்டக்களப்பில் ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு வெகுஜன ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

இது குறித்து மேற்படி அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ்த் தேசியம் வீறு கொண்டு போராடி நீதியான தீர்வுக்காகக் காத்து நிற்கும் தருணத்தில், 'பாதுகாப்புக் காரணங்கள்' என்ற போர்வையில் தமிழ் மக்களை வாட்டி வதைக்கும் கொடுமையான சட்டங்கள், தடைகள், கட்டுப்பாடுகள் இன்னமும் தொடர்ந்த வண்ணமுள்ளன.

எமது சகோதரர்கள் அணிதிரண்டு அரசுக்கு எதிராக போர்க்கொடி உயர்த்தியுள்ள போது அவர்களுக்கு ஆதரவாக நாமும் இணைந்து கொள்வது எமது கடமையாகும்.

மறுபுறம் சிறைச்சாலைகளில் எமது உடன்பிறப்புக்கள் விடுதலை வேண்டி உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

எமது சகோதரத்துவத்தை நிரூபிக்க இன்று வர்த்தக நிலையங்களை மூடி, போக்குவரத்தை நிறுத்தி, பாடசாலைகளைப் பகிஷ்கரிக்குமாறும் அவ்வறிக்கையில் மேலும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (செ)

## அறிவியல் வினா இல-92 விடைகள்

01) 1
02) 4
03) 3
04) 1
05) 2
06) தாய்லாந்து
07) 1950
08) திமிங்கிலம்
09) நெதர்லாந்து
10) அனுலா
11) பீக்கிங்
12) ஜெருசலேம்
13) ஒட்டாவா
14) ஜகார்த்தா
15) எதென்ஸ்
16) பேர்வினி
17) ஜேசேப்
18) டொக்கட்டரி கார்த்ரிங்
19) சீனர்
20) எல். மகுரே
21) 2
22) 5
23) 3
24) 4
25) 3
26) பாகுபாட்டுக்கு
27) பாதிக்கப்படும்
28) அங்கீகரிக்கும்
29) பத்திரிகைகள்
30) எதிர்நோக்கும்
31) 16
32) 17
33) 21
34) 4
35) 2
36) 12
37) 5
38) 0
39) 650
40) 2:1

## அறிவியல் வினா இல- 92

அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம்

- க.சிவாஜினி, யாழ். இந்து மகளிர் கல்லூரி
- சி. சயந்தன், வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி
- சி. கார்த்திகா, நாவலர் வீதி, ஆனைப்பந்தி
- சி. சிவதா, யாழ்ப்பாணம்
- செ. நி. ஜெரி, வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி
- அ. தீபன், அளவெட்டி
- க. தர்மினி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

## செய்தித் துளிகள்

### தபால்மூல வாக்களிப்பு

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு எதிர் வரும் 13,14 ம் திகதிகளில் இடம் பெறவுள்ளதாக தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (உ)

### தபால் பொதிகள் எடுத்து வருகை

(யாழ்ப்பாணம்)
நேற்று காங்கேசன்துறை வந்தடைந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் கப்பல்மூலம் யாழ். குடாநாட்டிற்கான 742 வெளியூர்த் தபால் பொதிகள் எடுத்துவரப்பட்டதாகவும்,

மேற்படி கப்பல் மூலம் குடா நாட்டில் இருந்து 44 வெளியூர் தபால் பொதிகள் அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாகவும் பிரதம தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை குடாநாட்டிற்கான எந்தவொரு தபால் பொதியும் தற்போது திருமலையில் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (உ-10)

### கூரைபிரித்து திருட்டு

(வண்ணார்பண்ணை)
கல்வியங்காடு ராணி வீதிப் பகுதியில் உள்ள வீடு ஒன்றினுள் புகுந்த திருடர்கள் அங்கிருந்து 30ஆயிரம்ரூபா பெறுமதியான வீட்டுப் பாவனைப் பொருட்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் திருடர்கள் கூரையைப்பிரித்து அதனூடாக உள்ளே இறங்கி திருடிச் சென்றுள்ளனர். (உ-5, 109)

### மகேஸ்வர பூசை

(யாழ்ப்பாணம்)
நயினைச் சித்தர் ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமார சுவாமிகளின் 53வதுகுருபூசைவிழா நாளை சனிக்கிழமை நயினாதீவில் உள்ள சுவாமிகளின் சமாதியில் நடைபெறவுள்ளது.

அன்றயதினம்காலை சமாதியின் மேல் எழுந்தருளியிருக்கும் நடராஜப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று மதியம் மகேஸ்வர பூசை இடம் பெறவுள்ளது. (உ)

### கருத்துரை

(யாழ்ப்பாணம்)
யாழ். இந்துக் கல்லூரியில் நாளை மு.ப 10 மணிமுதல் 12.00 மணிவரை சமகால இலக்கியத்தின் போக்குகள் என்ற தலைப்பில் பேராசிரியர் நா.சுப்பிரமணியன் கருத்துரை வழங்குவார்.

இந் நிகழ்வு என். பூலோகசிங்கம் தலைமையில் இடம் பெறவுள்ளது. (உ19,9)

### நிர்வாக சபை தெரிவு

(மானிப்பாய்)
சண்டிலிப்பாய் பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் கடந்தவாரம் இடம் பெற்றது.

இதில் நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக மு. பாலசிங்கம், செயலாளராக இ. துரைராசா, பொருளாளராக மா. இராஜகோபாலன், பொருகாராக நா. வேதநாயகன் ஆகியோருடன் 9 பேர் கொண்ட நிர்வாக உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். (செ-120)

### மக்கள் சிரமம்

(கொழும்புத்துறை)
யாழ்ப்பாண பிரதேச செயலகம் முன்பாகவும் கடற்றொழிலாளர் சமூகம் மேற்கொண்டு வரும் மறியல் போராட்டத்தினால் யாழ். பிரதேச செயலக பணிகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

அவசர தேவைகளின் பொருட்டு பிரதேசசெயலரின் கையொப்பம் பெறவேண்டிய மக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருவதைக் காண முடிகின்றது. (உ-223)

## அறிவியல் பகுதி வினா இல: 93

"வலம்புரி"
இல: 15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்: ...............
சொந்த முகவரி: ...............
கற்கும் பாடசாலை ...............
மாணவர் கையொப்பம்: ...............

இப் படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பவும்.

## இன்று ஒரு தகவல்

### கிடைத்த நல்ல வாய்ப்பு

பெரியவர் ஒருவர் புகைவண்டியைப் பிடிக்கவேண்டும் என்று வேகமாகச் சென்று கொண்டிருந்தார். அவர் சட்டைப் பையிலிருந்து மணிபர்சு தவறிக் கீழே விழுந்தது. அதை அவர்கவனிக்கவில்லை. அந்த வழியில் வந்த சிறுவன் ஒருவனின் கண்ணில் மணிபர்சு கிடப்பது தெரிந்தது. தூரத்தில் சென்று கொண்டிருக்கும் பெரியவர்தான் அதைத் தவற விட்டிருக்க வேண்டும் என்று நினைத்தான். மணிபர்சை எடுத்துக் கொண்டு பெரியவரிடம் ஓடினான். 'ஐயா! தாங்கள் தவற விட்ட மணிபர்சு பெற்றுக் கொள்ளுங்கள்' என்றான். அப்பொழுதுதான் நிறையப் பணம் இருந்த மணிபர்சைத் தொலைத்து விட்டோம் என்பது புரிந்தது.

மணிபர்சைப் பெற்றுக் கொண்ட அவர் 'தம்பி! இந்தப் பணம் மீண்டும் எனக்குக் கிடைக்கும் நல்வாய்ப்பு இருந்துள்ளது. ஆகவேதான் உன் கையில் கிடைத்துள்ளது. என் அன்புப் பரிசாக இந்த நூறு ரூபாவைப் பெற்றுக் கொள்' என்றார். ஐயா! இது எனக்குக் கிடைத்த நல்ல வாய்ப்பு. நான் ஒரு சாரணமாணவன். எங்கள குறிக்கோளே நாள்தோறும் யாரேனும் ஒருவருக்கு ஏதேனும் ஒரு உதவியையாவது செய்யவேண்டும் என்பது தான்.

'இன்று எனக்கு உங்களுக்கு உதவி செய்யும் நல்ல வாய்ப்பு கிடைத்தது. என் கடமையை விலைக்கு வாங்கவேண்டாம்' என்று சொல்லிவிட்டு அங்கிருந்து புறப்பட்டான் சிறுவன்.

பேராசிரியர் எ. சோதி

## விடுதலைப் புலிகளின் நடவடிக்கைக்கு பிரதியுபகாரமாக 10 பேரை விடுவிக்க "சினேகம்" முயற்சி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் விடுவித்த 10 பேருக்கு பிரதியுபகாரமாக தடுப்புக்காவலில் உள்ள 10 வடபகுதி இளைஞர்களை விடுதலை செய்யும் நோக்குடன்,

கடமையின்போது காணாமற்போன படையினரின் பெற்றோர் சங்கத்தின் தலைவர் ஈ.பி.நாணயக்கார 'சினேகம்' -புரிந்துணர்வுக்கான அமைப்பின் பிரதிநிதிகள் கடந்த செவ்வாயன்று களுத்துறைச் சிறைச்சாலைக்குச் சென்று கைதிகளைப் பார்வையிட்டனர்.

இந்த வகையில், இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியைச் சேர்ந்த 10 பேர் தெரிவு செய்யப்படுவதுடன், நீண்ட நாட்கள் தடுப்புக் காவலிலுள்ள இவர்களுக்குரிய சட்ட உதவி, பண உதவிகளை சோலோ யூ. அமைப்பு மேற்கொள்ளவுளளது. (உ)

## ச.ச. நிலையம் முன் மாதிரி

(மானிப்பாய்)

நவாலி முருகானந்தா சனசமூக நிலையத்தினர் அப்பகுதியைச் சேர்ந்த பாலர் வகுப்பு முதல் க.பொ.த. உயர்தர வகுப்பு வரையான மாணவ மாணவியருக்கு இலவசமாக பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்கள் மூலம் கல்வி கற்பித்து வருகின்றனர்.

(உ-120)

## தொண்டர் ஆசிரியர்கள் பகிஷ்கரிப்பு போராட்டம்

(கொழும்பு)

தொண்டர்ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரியும், பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கக்கோரியும் வவுனியா மாவட்டப் பாடசாலைகளில் நேற்று ஒரு நாள் பகிஷ்கரிப்புப் போராட்டம் நடைபெற்றுள்ளது.

பொதுஜனஐக்கியமுன்னணி அரசாங்கம் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் மூவாயிரம் பட்டதாரிகளை ஆசிரியர்களாக நியமிப்பதற்குத் தீர்மானித்திருந்த போதிலும், தற்போதைய அரசாங்கம் இந் நியமனங்களை இடைநிறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ)

## அறுவடை செய்த நெற் கதிர்களை அப்புறப்படுத்துவதில் கமக்காரர் சிரமம்

(மானிப்பாய்)

மாதகல் பகுதி விவசாயிகள் அறுவடை செய்யும்நெற்கதிர்களை அப்புறப்படுத்துவதில் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கடந்தசில தினங்களின்முன்பாக பெய்த பெருமழையால் வயல்களில் வெள்ளம் தேங்கி நிற்கிறது.

இதனால் அங்கு சூடடிக்க முடியாத நிலை காணப்படுவதனால்,

அறுவடை செய்யப்பட்ட நெற்கதிர்களை, வெற்றுமண்ணெண்ணெய் பரல்களை ஒன்றுடன் ஒன்றுபிணைத்துஅதன் மேல் அடுக்கி வெள்ளத்தினூடாக எடுத்துவந்து பிரதான வீதியில் உலரவைத்துவருகின்றனர். (உ-120)

## பண்ணிசைப் போட்டி

(நல்லூர்)

புண்ணியநாச்சியம்மையார் தினத்தையொட்டி யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை பாடசாலை மாணவர்களுக்கிடையில் நாளைமறுதினம்ஞாயிற்றுக்கிழமை பண்ணிசை போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

மூன்று பிரிவுகளாக நடைபெறும் இப் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 19 ஆம்திகதிசெவ்வாய்க்கிழமை நடைபெறும் என தேர்வுச் செயலாளர் வ.கந்தசாமி தெரிவித்துள்ளார். (செ-103)

## திருட்டைத் தடுக்க பொலிஸாருக்கு உதவுமாறு மக்களிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரை அண்டியபகுதிகளில் அதிகரித்து வரும் திருட்டுச் செயல்களைக் கட்டுப்படுத்த தம்முடன் ஒத்துழைக்குமாறுயாழ். பொலிஸ்நிலைய உயரதிகாரி பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த சில வாரங்களாக நல்லூர், கந்தர்மடம், கொக்குவில் பிறவுண் வீதி, ஆசீர்வாதம் வீதிப்பகுதிகளில் என்றுமில்லாதவாறு திருட்டுக்கள அதிகரித்திருப்பது தமக்குக் கிடைத்த முறைப்பாடுகள் மூலம் தெரிய வந்திருப்பதாகவும்,

தமது பெறுமதி வாய்ந்த சொத்துக்களைப் பாதுகாக்கும் விடயத்தில் உரியவர்கள் விழிப்புடன் செயற்படுவது அவசியம் எனவும் பொலிஸ் தரப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் நகைக்கடை உரிமையாளர்கள் பழைய நகைகளை விற்கவருபவர்கள் விடயத்தில் மிகக் கவனமாக நடந்து கொள்ளுமாறும் அதனால் ஏற்படும் பின்விளைவுகளுக்கு பொறுப்பேற்க வேண்டிவரும் எனவும் பொலிஸார் எச்சரிக்கும் தொனியில் குறிப்பிட்டுள்ளனர்.

(உ-10)

## இளையோர் இலக்கிய வட்டம் ஆரம்பிப்பு

(ஈச்சமோட்டை)

யாழ்.மாவட்டதேசியஇளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர் தகவல் நிலையத்தின் அனுசரணையுடன் 'இளையோர் இலக்கிய வட்டம் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட இளைஞர் சேவைகள்மன்றஉதவிஇயக்குநர் ரி. சிவதட்சணாமூர்த்தி தலைமையில் நடைபெற்றஇந்த ஆரம்பக்கூட்டத்தில் இளையோர் இலக்கிய வட்டத்திற்கு அமைப்பாளர் குழுவொன்றும் நியமிக்கப்பட்டது.

இந்த இளையோர் வட்டத்தின் ஆலோசகர்களாக உதவி இயக்குநர்ரி.சிவதட்சணாமூர்த்தியும், யாழ்.மாவட்டஇளைஞர்உத்தியோகத்தர் அ.சக்திவேலும் தெரிவு செய்யப்பட்டனர்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர் தகவல் நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் இந்த இளையோர் வட்டத்தின் ஊடாக எதிர் காலத்தில் பல கலைப்பணிகளைச் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

இளையோர் இலக்கிய வட்டத்தில் இணைந்து செயற்பட விரும்பும் கலை ஆர்வலர்களை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்டப் பணிமனையுடன் தொடர்புகொண்டு பெயர்களைப் பதிவு செய்யுமாறும்,

திங்கட்கிழமை பி.ப.3.00 மணிக்கு நிர்வாக சபைத் தெரிவுஇடம் பெறவுள்ளதால் அனைவரையும் தவறாது சமுகந்தருமாறும் இளையோர் இலக்கிய வட்டத்தின் அமைப்பாளர் குழு அறிவித்துள்ளது. (உ-59)

## வாராந்த நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வுகளில் இன்று மு.ப 10.30 மணிகு சிவஸ்ரீ ஐயாத்துரை குருக்களின் அறிமுகவுரையைத் தொடர்ந்து 'அடியார்கள் வினை தீர்க்கும் வேல்' என்னும் தலைப்பில் சைவப்புலவர் சைவசித்தாந்த பண்டிதர் சி. கா. கமலநாதன் சொற்பொழிவாற்றவுளளார். (செ)

## அபி. தொண்டர்களின் பரீட்சை பற்றிய கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச செயலகபிரிவுக்குட்பட்ட முதலாம் தொகுதி அபிவிருத்தித் தொண்டர்களுக்கான பரீட்சை பற்றிய அவசரகலந்துரையாடல் ஒன்று நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் அபிவிருத்திப் பரிசோதகர்கள் போதனாசிரியர்கள், அபிவிருத்தித் தொண்டர்கள் ஆகியோரை கலந்து கொள்ளும் படி கோப்பாய் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (உ)

## இடதுசாரி முன்னணி சமாதான முயற்சிகளுக்கு ஆதரவாக கருத்து

(கொழும்பு)

நாட்டில் 20 ஆண்டுகளாக நடைபெற்று வரும் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரும் முகமாக, நோர்வே அரசாங்கத்தின் மத்தியஸ்தத்துடன், ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் எடுத்துவரும் சமாதான முயற்சிகள் வரவேற்கத்தக்கன.

இடது சாரி முன்னணியின் தலைவர் கலாநிதி கருணாரட்ண விக்கிரமபாகு இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

சமாதானம் தொடர்பாக இடையில் ஏதாவது கருத்து முரண்பாடுகளோ, தாமதமோ ஏற்படும் பட்சத்தில் அதனை தொடர்ந்து நடத்துவதற்கு புதிய அரசாங்கம் பொறுப்புணர்வுடன் மாற்று நடவடிக்கை ஒன்றை எடுக்க வேண்டும்.

அவ்வாறு மாற்று நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில், பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கு ஏற்பட்ட கதியே புதிய அரசாங்கத்துக்கும் உருவாகும் எனவும் தெரிவித்துளளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்குவது குறித்து அரசியல் கட்சிகளிடையே முன்னுக்குப்பின் முரணான கருத்துக்களும், அபிப்பிராயங்களும் தோன்றுகின்றன எனவும் அவர் கவலை தெரிவித்துள்ளார். (உ-8)

## ஜெயந்தி விழா

(யாழ்ப்பாணம்)

சுவாமி விவேகானந்தரின் 140 வது ஜெயந்தி விழாவும் கருத்தரங்கும் பொதுக்கூட்டமும்வரும்10ஆம் திகதிஞாயிற்றுக்கிழமை பி. ப.4. 00 மணிக்கு திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயத்தில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் சிறப்புச் சொற்பொழிவை பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்ளும் சித்ரூபானந்தாஜி மகாராஜ் நிகழ்த்தவுளளார். (உ)

## கட்டாக் காலிகளால் தொல்லை

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் சீரணி நாகம்பாள் ஆலய சுற்றாடல் வயல்களிலுளள பயிர் வகைகளை கட்டாக்காலி ஆடு, மாடுகள் அழித்து வருகின்றதாகப் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

இவற்றைக் கட்டி வளர்க்குமாறு கால்நடைச் சொந்தக்காரர்களிடம் பாதிக்கப்பட்டவர்கள் அறிவுறுத்தினால் அதனை அவர்கள் உதாசீனம் செய்து வருகின்றனராம்.

(உ-120)

## இலங்கை வங்கி சாவகச்சேரி கிளையில் ஒய்வூதியம் பெறுவோர்க்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியின் சாவகச்சேரிக் கிளையில் ஒய்வூதியம் பெறுபவர்களின் கொடுப்பனவை வழங்க புதிய ஏற்பாடுகள செய்யப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம், இதுவரை காலமும் யாழ்ப்பாணத்தில் இயங்கிய சாவகச்சேரிக் கிளையிலும், பருத்தித்துறைக் கிளையிலும் ஒய்வூதியம் பெற்றவர்களுக்கு இம் மாதம் அச்சுவேலியில் இயங்கும் வங்கிக் கிளையில் ஒய்வூதியம் வழங்கப்படவுள்ளதாகவும்,

எதிர்வரும் மாதங்களில் ஒய்வூதியர்கள் அச்சுவேலியில் அல்லது யாழ்ப்பாணத்தில் உள்ள கிளை அலுவலகங்களில் கொடுப்பனவைப் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்படும் எனவும் இலங்கை வங்கியின் மாவட்டமுகாமையாளர் சி. நடராஜசிங்கம் தெரிவித்தார்

இதேவேளை, யாழ். நகரில் ஒய்வூதியம் பெறவிரும்புபவர்களுக்கு யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளையில், ஒய்வூதியம் வழங்கும் நாளன்றும் மறுநாளும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மேலும் தெரிவித்தார். (உ)

## சிந்தனைக்கு விருந்து

வள்ளல் இவன்என்று

வாழ்ந்து காட்டினான்

புலவர் வறுமையைப் போக்கிட வள்ளல்
தலையையே ஈந்திடமுன் வந்தான் - நிலவுலகில்
வள்ளன்மை ஈதென்று வாழ்ந்துகாட்டி னான்குமணன்
தெள்ளு தமிழ்ப் பித்தனிவன் தேர்.

'பழையவன்'

## யா.தொ.நுட்ப நிறுவனத்தில் விரிவுரைகள் ஆரம்பம்

(வண்ணார்பண்ணை)

யாழ்.உயர்தொழில் நுட்ப நிறுவனத்தின் 2002 கல்வி ஆண்டு மாலை நேர 1,2,3,4 ஆம்வருடமாணவர்களுக்கும், பகல் நேர 3,4 ஆம் வருட மாணவர்களுக்குமான விரிவுரைகள் நாளைசனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

பகல்நேர 1,2ஆம் வருட மாணவர்களுக்கான விரிவுரைகள்கடந்த செவ்வாய்க்கிழமைஆரம்பமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ-5-109)

## மகளிர்தினக் கட்டுரைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலைகளுக்கான மகளிர்தினக் கட்டுரைப் போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறுமென நல்லூர் கோட்டக்கல்வி அதிகாரி திருமதி எஸ். காங்கேயன் அறிவித்துள்ளார்.

(உ-9-19)

## நேர்முகப் பரீட்சை

(கொக்குவில்)

தேசிய கல்விநிறுவக பட்டப்பின்படிப்பு கல்வி டிப்ளோமா 2002/2003 ஆண்டுக்கான கற்கைநெறிக்கு, யாழ். இந்துக்கல்லூரி நிலையத்திற்கு ஆசிரியர்களை சேர்ப்பதற்கான நேர்முகப்பரீட்சை இம்மாதம் 16 ஆம் திகதி நடைபெறுமெனவும், அவர்களுக்கான அனுமதிக் கடிதங்கள அனுப்பிவைக்கப்படுமெனவும் சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி த. வில்வநாதன் தெரிவித்தார்.

(உ-243)

## பரீட்சை ஒத்திவைப்பு

(கொக்குவில்)

தேசிய கல்வி நிறுவக பட்டப்பின்படிப்பு கல்விடிப்ளோமா முதலாம் வருடப் பரீட்சை, ஏற்கனவே அறிவிக்கப்பட்ட 23 ம், 24 ம் திகதிகளில் நடைபெறமாட்டாதெனவும் எதிர் வரும் மார்ச் மாதம் நடை பெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைத் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என தேசிய கல்வி நிறுவக சிரேஷ்டவிரிவுரையாளர் திருமதி த. வில்வநாதன் தெரிவித்தார்.

(உ-243)

## அன்னையர் குடியிருப்பு திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

அன்னையர் குடியிருப்புஇல்லங்களின் திறப்பு விழாவும் கையளிப்பு வைபவமும்நாளை மறுதினம் காலை 9 00 மணிக்கு கந்தரோடையிலுள்ளசிவயோகம் அன்னையர்குடியிருப்பில் நடைபெறவுள்ளன.

இலண்டன் சிவயோகம் இந்து அறக் கட்டளை நிறுவனத்தின் உதவியுடன் விதவைப் பெண்களுக்காகஅமைக்கப்பட்ட இக்குடியிருப்பு இல்லங்களின் மேற்படி வைபவத்திற்கு ஆறு. திருமுருகன் தலைமைவகிப்பார்.

பிரதம விருந்தினராக சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி கலந்துகொள்வார்.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரஞான சம்பந்த பரமாச்சார்யசுவாமிகள் ஆசியுரையும், யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை வாழ்த்துரையும் வழங்கவுள்ளனர். (எ)

# கொலை கொள்ளை குற்றவாளிகளுக்கு 3 மாதங்களுள் மரண தண்டனை

## அமைச்சர் பிரேரணை சமர்ப்பிப்பார்

(கொழும்பு)

கொலைகாரர், கொள்ளையர், பாலியல் வல்லுறவு புரிந்தோர் ஆகியோர் குற்றவாளிகள் என்றுநிரூபிக்கப்பட்டால் அவர்களுக்கு மூன்று மாதங்களுக்குள் மரண தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்ற மசோதா ஒன்றை விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளேன்.

இவ்வாறு கடற்றொழில் கடல்வள அமைச்சர் மகிந்த விஜேசேகரா தெரிவித்துள்ளார்.

புகுல் வல்லை மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற வைபவமொன்றில் உரையாற்றிய அமைச்சர் மேலும் கூறியதாவது;

கொலை, கொள்ளை,பாலியல் சம்பவங்கள் அதிகம்இடம் பெறும் ஒரு நாட்டில் ஜனநாயகம் நிலைக்காது. மக்கள் அச்சமின்றி மகிழ்ச்சியாக வாழ வேண்டுமானால் அக்குற்றங்கள் அடியோடு ஒழிக்கப்பட வேண்டும்.

நாம் கஷ்டப்பட்டுஉழைத்த பணத்தை கொள்ளையர் ஒரே இரவில் கொள்ளையடித்துச் செல்கிறார்கள்.இரவில் நித்திரையில் கொலையும் செய்கிறார்கள்.

ஏழை விவசாயிகள் கஷ்டப்பட்டு உற்பத்தி செய்த விவசாயப் பொருள்களையும்திருடர்கள் திருடுகிறார்கள். இந்தக் கொடுமைகளைத் தடுக்கநாட்டில் இப்போதுள்ளசட்டங்கள் போதாது.

எனவே திடீரென்று ஏற்பட்டுள்ள கோபத்தால் நடக்கும் கொலைச்சம்பவங்கள் தவிர ஏனைய படுகொலைச் சம்பவங்களை ஒரே முறையில் விசாரணை செய்து மூன்று மாதங்களில் முடிக்க வேண்டும். இதே போல்கொள்ளை, பாலியல் குற்ற வழக்குகளும் விசாரணை செய்யப்பட வேண்டும். குற்றவாளிகளாகக் காணப்படுபவர்களுக்கு உடனடியாக மரண தண்டனை விதிக்கவேண்டும். இது தொடர்பான புதிய சட்டம் பாராளுமன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்படும். (எ)

## அமைச்சர் ஜெயலத் ஜயவர்த்தன

# பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை முகாமை 13ஆம் திகதி திறந்து வைப்பார்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில்,பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை முகாமை எதிர்வரும் 13 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர்டாக்டர்ஜெபலத்ஜயவர்த்தன சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

மேற்படி பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சையை மேற்கொள்ள இத்துறைசார் நிபுணரான சாள்ஸ் விவேகானந்தா' டாக்டர் எஸ். சிவஞானம், மயக்கமருந்து வழங்கல் சத்திரசிகிச்சை நிபுணர்களான டாக்டர் இராசரட்ணம், டாக்டர் வேலாயுதபிள்ளை ஆகிய நான்கு இலங்கைத் தமிழர்கள் உள்ளிட்ட பிரிட்டிஷ் குழுவினர் எதிர்வரும் 11 ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளதும்,

இருவாரங்கள் இங்கு தங்கியிருந்து அவயவங்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவற்றைச் சீர்செய்வதிலும் எரிகாயங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அந்த அடையாளங்களை நீக்கிச் சீர்ப்படுத்துவதிலும் ஈடுபடவுள்ளமை தெரிந்ததே.

இதேவேளை, மேற்படி சத்திர சிகிச்சை செய்வதற்கு இதுவரை 300 பேர் வரை யாழ். போதனா வைத்தியசாலையில் பதிவுசெய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(உ)

## ஆசிரியர்களுக்கான கரபந்தாட்ட போட்டி

(யாழ்ப்பாணம்)

இலங்கைதமிழர் ஆசிரியர்சங்கம்யாழ்.மாவட்ட ஆசிரியர்களுக்கு இடையில் நடத்திவரும் விளையாட்டுப் போட்டிகளில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி. ப. 3.00 மணிக்கு கரபந்தாட்டப் போட்டியை நடத்தவுள்ளது.

மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையை எதிர்த்து தெல்லிப்பழை கல்விக் கோட்டமும்,

முதலாம் இடத்துக்கான ஆட்டத்தில் பலாலி ஆசிரியர் கலாசாலையை எதிர்த்து யாழ்ப்பாணக் கல்விக்கோட்டமும் ஆடவுள்ளன.

இப்போட்டிகள் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நடைபெறவுள்ளது. (செ)

# வீட்டை முற்றாக இழந்தவர்களுக்கு 15 இலட்ச ரூபா நட்டஈடு

## வழங்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வீடுமுழுவதும் அழிக்கப்பட்ட நிலையில்அதன் உரிமையாளருக்கு 15இலட்சம் ரூபா நட்டஈடாக வழங்கப்பட வேண்டும் என்று அகில இலங்கை வர்த்தகக் கலைமன்றம் பிரதம மந்திரி ரணில்விக்கிரமசிங்காவின் ஊடாக ஜனாதிபதிக்கு கடந்த 4ஆம் திகதி அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் கோரியுள்ளது.

அக்கடிதத்தில்மேலும்1983 ஆம் ஆண்டில் சொத்துக்களை இழந்தவர்களுக்கு இழப்பீடாக ஆசக்கூடிய தொகையாக1இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

அன்று சீமெந்தின் விலை 35ரூபாவாகவும் இன்று 550 ரூபாவாகவும் உள்ளது.அதுபோல் ஏனைய கட்டடப் பொருள்களின் விலையும் அதிகரித்து விட்டது.இந்நிலையில் அரசாங்க உத்தியோகத்தர்களின் சம்பளமும் ஓய்வூதியமும் காலத்திற்குக் காலம்கூட்டப்பட்டுள்ளன.

ஆனால் நட்ட ஈடுகூட்டப்படவில்லை.

வீட்டின் ஒருபகுதியைஇழந்தவர்களுக்கு நட்டஈடுகொடுக்கப்பட்டுள்ளது.ஆனால் வீடு முழுவதையும் இழந்தவர்களுக்கு நட்ட ஈடுவழங்கப்படவில்லை.

அரசாங்க உத்தியோகத்தர் ஓய்வூதியம்பெறுவோர்உட்பட வீட்டை இழந்த அனைவருக்கும் நட்ட ஈடுவழங்கப்பட வேண்டும்.

தென்னை மரங்கள், பனை மரங்கள் வேறு பெறுமதி மிக்க மரங்கள் கோழிப்பண்ணை, கால்நடைகள் விவசாய விளைபொருள்கள் ஆகியவற்றின் நட்ட ஈடுகள் அவை சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் மூலம்வழங்கப்பட வேண்டும் என்றும் அக்கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. (எ)

## பெற்றோரின் வெள்ளி விழாவை எதிர்த்து தனயன் பெரும் தகராறு

(கல்வியன்காடு)

பெற்றோர் திருமண வெள்ளிவிழாக் கொண்டாடுவதற்கு ஏற்பாடு செய்துள்ள தனைப் பொறுக்க முடியாத தனயன் பெற்றோருடன் தகராற்றில்ஈடுபட்ட சம்பவம் நேற்று முன்தினம் கல்வியன்காடு மூன்றாம் கட்டைப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம்குறித்து மேலும் தெரிய வருவதாவது;

மேற்படி தம்பதியரின் மகன் திருமணம் செய்து வேறாக தனிக்குடித்தனம் நடத்தி வருகின்றார்.

இவரது பெற்றோரின் வெள்ளிவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனைப் பொறுக்க முடியாத மகன் பெற்றோரின் வீட்டினுள் புகுந்து வீட்டின் ஒருபகுதி சுவரை வீழ்த்தியுள்ளதுடன், விழாவன்று சமைப்பதற்காக வைத்திருந்த அரிசியை நிலத்தில் கொட்டியும் வாழை மரங்களை வெட்டி வீழ்த்தியுமுள்ளார்.

இது குறித்து பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டதனையடுத்து, பொலிஸார் சம்பவம் நடைபெற்ற இடத்தைச் சென்று பார்வையிட்டனர். (செ-245)

## குற்றப் பத்திரிகைகள் தனித்தனியாக மீளாய்வு

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு குற்றப்பத்திரிகை கையளிக்கப்பட்டவர்கள் தொடர்பான விடயங்கள் தனித்தனியாக மீளாய்வு செய்யப்படும்.

தேவை ஏற்படின் குற்றப்பத்திரிகை வாபஸ் பெறப்பட்டு சம்பந்தப்பட்டவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள்.

இவ்வாறு சட்டமா அதிபர் கே.சி.கமலசபேசன் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் குற்றப்பத்திரிகை சமர்ப்பிக்கப்பட்டவர்கள் தொடர்பான மீளாய்வு கடந்த புதன் முதல் ஆரம்பமாகியுள்ளதுடன்,

பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோருக்கு குற்றப்பத்திரிகை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் சட்டமா அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (உ)

## டர்பன் நகர பிரஜைக்கான விருது இலங்கையருக்கு

(மானிப்பாய்)

அவுஸ்ரேலிய நாட்டிலுள்ள விக்ரோறியா மாநிலத்தில் டர்பன் மாநகர பிரஜைக்கான விருது,எழுத்தாளரும் பத்திரிகையாளருமான இலங்கையைச் சேர்ந்த வெ. முருகபூபதிக்கு அண்மையில் வழங்கப்பட்டது.

விக்ரோறியா மாநில பண்டூறா பூஸ்காலில் அண்மையில் நடைபெற்ற வைபவத்தில் இந்த விருதை முருகபூபதி பெற்றுக்கொண்டார்.

பல இலக்கிய நூல்களின் ஆசிரியரான முருகபூபதி, இலங்கை மாணவர்கல்வி நிதியத்தில் நிதிச் செயலாளராகவும்,ஒன்றிய தமிழர் தோழமையின் தமிழ் நூல் நிலையச் செயலாளராகவும், அவுஸ்திரேலிய தமிழ் எழுத்தாளர் விழாவின் அமைப்பாளராகவும் பணியாற்றுவது குறிப்பிடத்தக்கது.

(உ-233)

## மிதிவெடி அகற்றும் பணியில் படையினர்

(மல்லாகம்)

வலி-வடக்கு பகுதியில் மிதிவெடிகள் அகற்றும் பணியில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

அளவெட்டிமருத்துவமனை சுற்றாடல், அம்பனை, மல்லாகம் ஆகிய பகுதிகளில் உள்ள மிதிவெடிகளை அகற்றுமாறு இப்பகுதி மக்கள் பிரதேச சபையினூடாக விடுத்த வேண்டுகோளை அடுத்து இராணுவத்தினரால் இப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(உ-5,12)

மிக விரைவில் எதிர் பாருங்கள்---

# "வலம்புரியின் வாரமலர்"

உங்கள் எண்ணத்தில் சுரக்கும்கற்பனை ஊற்றை சுமந்துவருகிறது

- கவிதை
- சிறுகதை
- நாவல்
- கட்டுரை
- கேள்வி பதில்
- வியாதிக்கு விளக்கம்
- இலக்கிய நயம்
- மங்கையர் பகுதி
- பேனா நண்பர்கள்
- சிறுவர் சிந்தனை
- அரசியல் விளாசல்

(உங்கள் கேள்விகளுக்கு மருத்துவ நிபுணர்களின் பதில்)

**வாரமலர் ஊடாக பேனா நண்பர்களைத் தேடுவோர் உங்கள்பாஸ் போட் அளவு படத்துடன் விபரங்களை விரைந்து அனுப்புங்கள்-**

## சிறுவர் மலருக்கான ஆக்கங்கள்

## எங்கள் பதிலுக்கான உங்கள் கேள்விகள்

மற்றும்-
உங்கள் கற்பனையில் விளைந்த கவிதைகள்,சிறுகதைகள் என்பவற்றுடன் மங்கையர் பகுதிக்கான துணுக்குகள்; சுவாரசியமான சிறியஜோக்குகள், என்பவற்றை உடன்அனுப்பிவையுங்கள்.

இன்னும் பல.. பல...

# இளம் எழுத்தாளர்களுக்கு புதிய களம்

உங்கள் ஆக்கங்களும் வலம்புரியின் வாரமலரில் இடம்பெற வேண்டுமா? விரைந்து அனுப்புங்கள்

**ஆசிரியர்**
வலம்புரி வாரமலர்

இல. 15, வெள்ளாந் தெரு,
யாழ்ப்பாணம்.

# உலக விவகாரங்களில் அமெரிக்கா தன்னிச்சையாக நடந்து கொள்கிறது

## பிரான்ஸ் வெளியுறவு அமைச்சர் சீற்றம்

(பாரிஸ்)

உலக விவகாரங்களில் அமெரிக்கா மேம்போக்காக நடந்து கொள்வதாக பிரான்ஸ் வெளியுறவு அமைச்சர் இடர்வெதிரீன் அமெரிக்காவை கடுமையாகச் சாடியுள்ளார்.

அமெரிக்கா அனைத்து நடவடிக்கைகளையும் பயங்கரவாத நடவடிக்கைகளென தனக்குள்ளேயே தீர்மானித்துக் கொள்வதுடன், ஏனைய நாடுகளுடன் கலந்தாலோசிக்காமல் தன்னிச்சையான முடிவுகளை மேற்கொள்வதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அமெரிக்காவின் இந்த அணுகுமுறை பிரச்சினைகளை மேலும் சிக்கலடையச் செய்வதுடன், தீராதபிரச்சினையாகஉருவெடுக்கவேவழி செய்யுமென்றும் அவர் கூறியுள்ளார்.

இஸ்ரேல்-பலஸ்தீன பிரச்சினையில், இஸ்ரேல் ஒரு அடக்குமுறையான கொள்கையைக் கடைப்பிடிக்கிறது. அதன் கட்டுமீறிய நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா நேரடியாகவும் மறைமுகமாகவும் தனது பூரண ஆதரவை வழங்கிவருகின்றது.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கைகளை ஐரோப்பிய ஒன்றியம் முற்றாக நிராகரித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-5)

# பெரியார் சிலையும் பெயர்த்து எடுப்பு

## தமிழகத்தில் தமிழுக்கு அநீதி

(சென்னை)

சென்னை மெரினா கடற்கரையில்இருந்த கண்ணகி சிலை இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டது போன்று அண்மையில் திருத்தணியில், நள்ளிரவில் பெரியார் சிலையை பெயர்த்து எடுத்து பீடத்தை புல்டோசரால் இடித்து தரைமட்டமாக்கி சிலையை சாக்கில்சுற்றி தரதரவென்று இழுத்துச் சென்றதாக கூறப்படுகிறது.

பெரியார்சிலை வைக்கப்பட்டிருந்தஇடம் நெடுஞ்சாலை புறம்போக்கில் வருவதால் இதனை நிறுவ வேண்டாமென கிராம நிர்வாக அதிகாரி தடுத்தும் அந்தச் சிலை அமைக்கப்பட்டதாகவும்,

அவர்கொடுத்த புகாரின் பேரில் கலெக்டரின் உத்தரவினையடுத்து பொலிஸ் பாதுகாப்போடு அந்தச் சிலை புல்டோசர் மூலம் பக்குவமாக எடுக்கப்பட்டதாகவும் இதுகுறித்து ஆளும்தரப்பில் நியாயப்படுத்தப்பட்டுள்ளது. (உ)

# ஆப்கான் மக்களுக்கான உணவு விநியோகத்துக்கு பனி பெரும் தடை

(காபூல்)

ஆப்கானில் பசியால் வாடும் மக்களுக்கான உணவு விநியோகத்திற்கு அங்கு நிலவும் கடும்பனி பெரும் தடையாகஇருந்து வருவதாக கூறப்படுகிறது.

சுமார் 85 ஆயிரம் மக்களின் உயிர்வாழ்வுக்கு வேண்டிய அத்தியாவசிய உணவுப் பொருட்களை ஏற்றிவந்த வாகனத் தொடரணி உரிய இடத்தை அடையும் முன்பே பனிக்கட்டிகளினுள் புதையுண்டு காணப்படுவதாகவும்,

இதனை மீட்பதற்காக குழுவொன்று விரைந்திருப்பதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, பஞ்சம் பசியால் வாடியமக்கள், அங்குநிலவும் பனி, கடும்காற்று காரணமாக மேலும் அதிக பாதிப்பினை எதிர்கொண்டு வருவதாகவும் கூறப்படுகின்றது. (உ)

# 27 ஆப்கானியர்கள் அமெரிக்காவால் விடுதலை

(காபூல்)

ஜனவரி 23 ஆம் திகதி ஆப்கானிஸ்தானில் கைது செய்யப்பட்ட இருபத்தேழு ஆப்கானியர்களையும் அமெரிக்கா விடுதலை செய்துள்ளது.

இந்த இருபத்தேழு பேரும் தலிபான் மற்றும் அல்கெய்டா அமைப்பினருடன் எந்தவித தொடர்பும் வைத்திருக்கவில்லையென அமெரிக்க ரகசிய உளவாளிகள் தெரிவித்ததனையடுத்தே இவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். (செ)

# உலக தரிசனம்

# பயங்கரவாத ஒழிப்பு முன்நடவடிக்கையில் சீனா

(பீஜிங்)

உலக நாடுகளில் பயங்கரவாத, தீவிரவாத எதிர்ப்பு தாக்குதல்கள் அதிகரித்து வருவதையடுத்து சீனா முதன் முறையாக பயங்கரவாத ஒழிப்பு பாதுகாப்பு படையை உருவாக்கியுள்ளது.

67 பேரைக் கொண்ட இப்படை சீனாவின் சங்காய் நகரில் இருந்து தமது நடவடிக்கைகளை மேற்கொள்ளும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நவீன ஆயுதங்களால் நடத்தப்பட்டு வரும் குண்டுத்தாக்குதல்கள், நச்சுவாயுத் தாக்குதல்கள், படு கொலைகள்என்பவற்றை எதிர்த்துப்போராடுவதற்காக இப்படையினர் பயிற்றுவிக்கப்படுவர் என சீனபாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேற்குலக நாடுகளைப் போன்று பயங்கரவாதப் பிரச்சினைகளையும், அச்சுறுத்தல்களையும் சீனாஎதிர்நோக்கா விட்டாலும் இப்பிரச்சினையை அதுபாரதூரமாக கருதி முற்பாதுகாப்பை ஏற்படுத்தும் நோக்கிலே இப்படை அமைக்கப்பட்டுள்ளது என கூறப்படுகிறது. (உ-8)

## ஈரான் மீது தாக்குதல் நடத்தினால்

# மீண்டும் ஒரு வியட்நாம் யுத்தத்தை அமெரிக்கா சந்திக்க நேரிடும்

(தெஹ்ரான்)

அமெரிக்கா தங்கள் நாட்டின் மீது தாக்குதல் நடத்தினால் மீண்டும் ஒரு வியட்நாம் யுத்தத்தை அது சந்திக்க நேரிடும என ஈரான் எல்லைப் படையின் கொமாண்டர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஈரான் எந்தவொரு தருணத்திலும் அமெரிக்காவிற்கு மீண்டும் ஒரு வியட்நாமை உருவாக்க எண்ணவில்லை, ஆனால், அது விரும்பினால் அதனை ஈரான் நிறைவேற்றும்.

ஈரான், ஈராக் மற்றும் வட கொரிய நாடுகள் உலக சமாதானத்தை அழிக்கும் வகையில் ஆயுதங்களை உற்பத்தி செய்கின்றன என அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் குற்றஞ்சாட்டியிருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும் முகமாகவே ஈரான் எல்லைப் படை கொமாண்டர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (செ)

## விளையாட்டு செய்திகள்

# பலம்மிக்க பாக். அணியுடன் மோதும் இளம் வீரர்கள்

(சார்ஜா)

சார்ஜாவில் நடைபெற்று வரும் பாகிஸ்தான் அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணியில் மிகவும் அனுபவம் குறைந்த இளம் வீரர்களே; பலம்மிக்கபாகிஸ்தான் அணியுடன் மோதுவதாக மேற்கிந்திய தீவுகள் அணியின் தலைவர் கார்ல் கூப்பர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இலங்கையில் இடம்பெற்ற போட்டியின் போது மேற்கிந்திய தீவுகள் அணியின் நட்சத்திர ஆட்டக்காரர் பிறைன்லாராதோள் மூட்டில் ஏற்பட்ட உபாதை காரணமாக இச் சுற்றுப் போட்டியில் கலந்துகொள்ள மாட்டாரென அறிவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (உ-10)

# இந்திய அணித் தலைவர் கங்குலியின்தலைமைப்பதவி ஆட்டம் காண்கிறது

(புதுடில்லி)

நடந்துமுடிந்த இந்திய-இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளிலும் இந்திய அணி தோல்வியைத் தழுவிக்கொண்டது.

இதனால் இந்திய அணித் தலைவர் சௌரவ் கங்குலியின் தலைமைப் பதவி ஆட்டங்காணத் தொடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவிருக்கும் சிம்பாவே - இந்திய அணிகளுக்கிடையிலான போட்டிகளில் இந்திய அணிக்கு தலைமை தாங்குவது தொடர்பாக இந்திய கிரிக்கெட்-கட்டுப்பாட்டுச் சபை இதுவரை அறிவிப்பு எதனையும் விடுக்காதமையால் கிரிக்கெட் ரசிகர்களிடையே பல்வேறு சந்தேகங்கள் எழுந்துள்ளன. (5-10)

## யஷீர் அரபாத்துடனான உறவை

# மீள்பரிசீலனை செய்யப்போவதாக அமெரிக்க அதிபர் புஷ் எச்சரிக்கை

(வாஷிங்டன்)

இஸ்ரேல் மீது, பலஸ்தீனியர்கள் தொடர்ந்தும் தாக்குதல் நடத்தும் பட்சத்தில் பலஸ்தீன தலைவர் யஷீர் அரபாத்துடனான உறவை மீள் பரிசீலனை செய்யப்போவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஜோர்தான் மன்னர் அப்துல்லாவுடன் கடந்த வெள்ளியன்று தொடர்பு கொண்டு பேசும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத்திற்கு எதிராக அமெரிக்கா மேற்கொண்டு வரும் போரில் அராபாத்தும் இணைந்து கொள்ள வேண்டும்.

அவ்வாறு இணைந்து கொள்ளாத வரை இஸ்ரேல்-பலஸ்தீன பிரச்சினையில் அமெரிக்கா நேரடியாக தலையீடு எதனையும் மேற் கொள்ளாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (5)

# முடி சூட்டு பொன்விழா

(லண்டன்)

பிரிட்டிஷ் இளவரசி, எலிசபெத் மகாராணியாக முடிசூட்டப்பட்டதன் பொன் விழாவை நேற்று முன்தினம் கொண்டாடினார்.

6வது ஜோர்ஜ் மன்னர் இறந்த பிறகு 1952 ஆம் ஆண்டுபெப்ரவரிமாதம்6ஆம் திகதி அவரது மகள் எலிசபெத் மகாராணியாக முடிசூடிக் கொண்டார்.

மன்னர் இறந்ததினம் பிரிட்டனின் துக்கதினமாக அனுஷ்டிக்கப் பட்டு வருகின்றது. இந்த வருடம் அவரது ஞாபகார்த்தமாக புற்று நோய் பராமரிப்பு நிலையம் ஒன்றை மகாராணி திறந்து வைத்துள்ளார். (உ-8)

## பிரித்தானியாவில்

# நிரந்தர குடியுரிமை வழங்க விசேட நடைமுறைகள்

(லண்டன்)

பிரித்தானியாவில் தஞ்சம் புகுவோருக்கு நிரந்தர குடியுரிமை வழங்கப்படும் போது விசேட நடைமுறைகளைக் கையாள அந்நாட்டு அரசு தீர்மானித்துள்ளது.

இதன்படி நிரந்தர குடியுரிமைக்கு விண்ணப்பிப் போரிடம் ஆங்கிலம் மற்றும் கலாசாரம் குறித்துப் பரீட்சிக்கப்படும்.

க

அத்துடன் குடியுரிமைக்கா விண்ணப்பிப் போரிடமிருந்து சத்தியப் பிரமாணம் பெற்றுக் கொள்ளப்படும் எனவும் பிரித்தானிய உள் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். (செ)

## கொலின்பவல் விஜயம

அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவல் கரிபியன் நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக அங்கு விஜயம் செய்துள்ளார்.

சட்டவிரோதகுடியேற்றம், போதைப் பொருள் கடத்தல் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவது குறித்து அவர் பேச்சுக்கள் நடத்தவுள்ளார். (செ)

குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி
வடுப்பரியும் நாணுடையான்
கட்டே தெளிவு. குறள்

# வலம்புரி

## நோர்வே பிரதமர் கூறிய உண்மை

இனப்பிரச்சினை தீர்வுக்கு வர்லாற்றுச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இதனை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் இவ்வாறு நோர்வேயின் பிரதமர் கூறியுள்ளார்.

இலங்கையின் இனவிவகாரத்தில் கருத்துக் கூறும் தகுதி இந்தியாவை விட, அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளைவிட நோர்வேக்கு உண்டு. அதே வேளை இனப்பிரச்சினை விவகாரத்தை நோர்வே நன்கு அறிந்தும் வைத்துள்ளது.

இந் நிலையில் இலங்கையின் இனப்பிரச்சினை சுமுகமாக-சாதகமாக தீர்க்கப்பட வேண்டுமாயின் அதற்கு ஐக்கிய தேசிய கட்சியினதும், பொதுஜன ஐக்கிய முன்னணியினதும் ஒருமித்த பங்களிப்பு அவசியமாகும். இரண்டில் ஒருகட்சி பின்னடித்தாலும் இனப்பிரச்சினையை சுமுகமாக தீர்க்க முடியாது இத்தகைய ஓர் சூழ்நிலையே கடந்த இருபது வருடங்களாக இலங்கையின் அரசியலில் காணப்பட்டது.

காலஞ்சென்ற முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனா 1978இல் கொண்டு வந்த புதிய அரசியல் அமைப்பு நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பாண்மை பலத்திற்கு புதைகுழி தோண்டியது. அதே வேளை சர்வ வல்லமை பொருந்திய ஜனாதிபதியையும் தோற்றுவித்தது.

ஜனாதிபதியின் சர்வவல்லமையும், நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெருமபாண்மை பலத்தை பெறமுடியாமல் போனமையும் இனப்பிரச்சினை நீண்டு செல்வதற்கு காரணமாக இருந்தது. எனினும் கால ஓட்டத்தில் ஜே.ஆர்.ஜயவர்த்தனாவின் அரசியலமைப்பு இருகட்சி ஆட்சிக்கு வழிசமைத்துள்ளது. ஒரு நாட்டின் அரசியல்

# தமிழ்த் தொண்டிற்காய் வாழ்ந்த தவமுனிவர் தனி நாயகம் அடிகளாரை நினைவு கூர்வோம்

**இன்று தனிநாயகம் அடிகளார் பிறந்த தினம்**

தமிழன் தன் மொழியைக் காதலிப்பது போல வேறெவரும் தம் மொழியைக் காதலிப்பதையோ, தமிழ்ப்புலவர் தம்மொழியைப் போற்றுவது போல வேறெவ்விலக்கியத்திலும் யாரேனும் தம் மொழியைப் போற்றுவதையோ கண்டிலேன். சேக்கிழாரை விரித்துப் பார்மின், அவர் தமிழ் என்னும் சொல்லைத் தம் செய்யுளில் அமைக்க வேண்டுமெனின் அதற்கு அடையில்லாமல் எழுதப் பின்வாங்குவார். செந்தமிழ், இன்றமிழ், வண்டமிழ், அருந்தமிழ், செழுந்தமிழ், தீந்தமிழ், உயர்தமிழ், கோதில் தமிழ், தேன்பொழியும் தமிழ் என்றெல்லாம் யாழினும் இனி திசைப்பர். இனித்தேவாரங்களைப் பாடினார் என்னும் பொருளில் தமிழ் பாடியறைந்தார், தமிழ் மாலைகள் சாற்றினார் என்று அப்புலவர் கூறுவதை யார் தான் நினைந்து நினைந்து இன்புற்றிலர்? மேலும் திருமூலர் " என்னை நன்றாக இறைவன் படைத் தனன், தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" என்று கூறுவது போலெல் லாம் பிறமொழிப் புலவர் தம் மொழியைப் போற்றிக் கூறியதாகத் தெரியவில்லை என் பன்மொழியறிந்த தவத் திரு. தனிநாயகம் அடிகளார் (தமிழ்த் தூது நூலில்) கூறியிருப்பது அவரின் தமிழ் பற்று எத்தகையது என்பதை உற்றுணரவைக்கும்..

**தொகுப்பு :-மதிவாணர்**

தமிழ் மீது தணியாத காதல் கொண்ட நம் தனிநாயகம் அடிகளார் உலகத் தமிழாராய்ச்சி மன்றை நிறுவித் தமிழாய வைத்ததை எண்ணும் தோறும் எம் உள்ளங்கள் உவகை கொள்ளாமலிருக்க முடியாது. அறிவுக் களஞ்சியமாக, நடமாடும் பல்கலைக்கழகமாகத் திகழ்ந்த தனிநாயகம் அடிகளார் உலகத்தின் ஆசாபாசங்களைத் துறந்த முனிவராக இருந்த போதும் அவர் தமிழ் மேல் கொண்ட பற்று அளப்பரியது. யாழ்ப்பாணத்தில் 1951ல் நடைபெற்ற தமிழ் விழாவில் அவர் ஆற்றிய கன்னிப் பேச்சில் அவருடைய பன்மொழி ஞானம் புலனாயிற்று. "ஆங்கிலம் வணிகத்தின் மொழி என்றும், இலத்தீன் சட்டத்தின் மொழியென்றும், கிரேக்கம் இசையின் மொழியென்றும் இத்தாலியம் காதலின் மொழி என்றும், பிரெஞ்சு தூதின் மொழி என்றும் கூறுவது ஒரு புடையாக்குமெனின், தமிழ் இரக்கத்தின் மொழி - பக்தியின் மொழி எனக் கூறுவதும் இனிது பொருந்தும் என்று அவர் பேச்சில் குறிப்பிட்டார்.

தமிழார்வம் கொண்ட அடிகளார் தாம் செல்லும் நாடுகளில் தமிழின் தொன்மை, மென்மை, பக்தி இலக்கியங்கள் பற்றியெல்லாம் விதந்துரைத்தார். தமிழரின் பண்பாடு பற்றி உரைகள் நிகழ்த்தினார். கட்டுரைகள் எழுதினார். வானொலியில் உரை செய்தார். தமிழ்த் தொண்டு செய்தவர்களையெல்லாம் வாயார வாழ்த்தினார். தமிழ்த் தொண்டாற்றிய நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்ட தவத்திரு தனிநாயகம் அடிகளார்" சுவாமி ஞானப்பிரகாசர் கத்தோலிக்க திருமறைக்கும், தமிழ் இயலுக்கும் ஆற்றிய அரும் பெரும் தொண்டினை நன்கு புரிந்து கொள்ள வேண்டும். சுவாமிகள் பல்வேறு துறையில் எழுதிய நூல்களைப் பார்க்கும் பொழுது அவர் எவ்வனம் தான் இத்துணை நூல்களை யாத்துள்ளார் என்று வியப்படைகின்றோம். அவர் மாபெரும் திருமறை ஆசிரியராக இருப்பதுடன் தமிழ் இயலிலும் ஒப்பற்ற அறிஞராக விளங்குகின்றார். அவர் பலதுறைகளில் தம் ஆற்றலைச் செலுத்தியிருக்கிறார். அவர் திருமறை ஆசிரியராக இருப்பதுடன் வரலாற்று ஆசிரியராகவும், ஒப்பியல் மொழி வல்லுநராகவும் தமிழின் தொன்மையையும், ஒப்பற்ற தன்மையையும் எடுத்துக் காட்டும் வல்லுநராகவும் விளங்குகின்றார். அவருடைய கடல் போன்ற புலமையைக் காட்டுவதற்கு அவர் யாத்த "சொற் பிறப்பு ஒப்பியல் தமிழ் அகராதி"யே போதிய சான்று. இத்தகைய ஒரு பேரறிஞனைத் தமிழ்த் தாய் ஈழநாட்டில் பெற்று எடுத்தாளே என்று நாம் பெருமை கொள்கின்றோம். அவருடைய தொண்டைத் தொடர்ந்து செய்வது இளம் தமிழ் அறிஞருடைய கடமை" என்று கூறினார். இத்தகு சிறந்த தொண்டாற்றிய எம் தவத் திரு. தனிநாயகம் அடிகளாரும் போற்றுதற்குரியவரே. தமிழே தனது உயிர் மூச்சாகக் கொண்ட அவரை நாமும் நினைவு கூர்வோம். தமிழ்த் தொண்டாற்றுவோம்.

## வெள்ளி நற்சிந்தனை

# திரு விளக்கேற்றித் தெய்வீக மலர் கொண்டு வழிபாடு செய்பவர்கள் வாழ்வில் இன்புறுவார்கள்.



ஸ்ரீவிக்கினேஸ்வரருடைய அனுக்கிரகம் இருந்தால் தான் உலகில் எந்தக் காரியமும் தடையின்றிநடக்கும் . தடைகளை நீக்கிப் பூரண அனுக்கிரகம் செய்கிற அழகானகுழந்தைத் தெய்வம் பிள்ளையார். அவரைப் பிரார்த்தித்துப் பூஜை செய்து விக்னங்கள் இன்றி நல்வாழ்வு வாழ்வோம் . அதிகாலையில் எழுந்து பூஜை அறையில் திருவிளக்கு ஜோதி குத்துவிளக்கு முதலியனவற்றில் ஏதாவது ஒன்றை ஏற்றிவைக்கவேண்டும். விளக்கைத் திரியால் தூண்டிவிட வேண்டும். பூஜை விளக்கைத்தானே அணையவிடக் கூடாது. பூ, பால்துளி, தூண்டுகோல், குச்சியால் சமாதானம் செய்தல் வேண்டும்.

***தீபம் ஏற்றுதல்.***

மாலையில் விளக்கேற்றும் போது கொல்லைக்கதவை மூடிவிடவேண்டும். தீபம் லக்ஷ்மிவாசம் செய்யும் இடம். மங்கலச் சின்னம் . இல்லறம் பிரகாசமாக இருக்க , எப்போதும் தீபமும் பரிசுத்தமாக இருக்க வேண்டும். துளசிமாடம் கட்டி தினமும் பூஜை செய்வது குடும்பத்துக்கு மேலும் நன்மைகள் வந்து கொண்டிருக்கும். மாலையில் துளசிமாடத்தில் விளக்கேற்றி வைத்தால் வற்றாதசெல்வம் பெற்றுவாழலாம்.

***உகந்த மலர்கள்.***

சிவனுக்கு - கொன்றை ஆத்தி, கொக்கு மந்தாரை, தாமரை. பிள்ளையார் - வெட்சி. முருகன் - கடம்பமலர், அலரி, தாமரை. பார்வதி - நீலமலர்கள். சூரியன் - தாமரை. சரஸ்வதி - வெண்தாமரை, பெருமாள் (விஷ்ணு) - வெண்ணிறப்பூக்கள் (கண்டகாரிப்பூ தவிர), பச்சை, தாமரை, துளசி, செண்பகம், செவ்வந்தி. லக்ஷ்மி - செந்தாமரை மற்றும் விஷ்ணுவுக்கு உகந்தவை எல்லாம். தங்கம், பூ, வெற்றிலை இவை

**எஸ்.விஜயலட்சுமி**

இரவில், பால், தயிர், சுண்ணாம்பு வெள்ளைப் பண்டத்தை விளக்கேற்றியதும் வாங்கவும் கூடாது. கடன் கொடுக்கவும் கூடாது. வெள்ளி ஜோதியைப் பூஜை அறையில் வைத்தால் ஒரு பித்தளைத்தட்டின் மீது வைக்கவேண்டும். தீபம் லக்ஷ்மி அந்தத் திருவைப் ..ப்பூ.....ப்பூ.... என்று சத்தமிட்டு ஊதினால் திருவிளக்குத் தேவிக்கு வெறுப்பு வந்து விடும். விளக்கை மாலையில் ஏற்றும்பொழுது வீட்டின் பின்புற வாசற்கதவை அடைத்துவிடவேண்டும். விளக்கை வெறும்தரையில் வைக்காமல் பலகை அல்லது சிறிய தாம்பாளத்தில் வைக்கலாம். இரு விளக்கை வைத்து வணங்கக்கூடாது. ஒன்று அல்லது மூன்று விளக்கு வைத்துத்தான் வணங்கவேண்டும் என்பார்கள். காலையில் லக்ஷ்மிக்கு விளக்கேற்றி வணங்கினால் செல்வம் தினமும் பெருகும்.

***ஆண்கள் விளக்கை அணைக்கக் கூடாது.***

காலையிலும் மாலையிலும் குறித்த நேரத்தில் விளக்கேற்றி வணங்கினால் , செல்வம்வற்றாது பெருகுவதுடன் நம் பாவமும் விலகும். விளக்கைக் கிழக்குத் திசை பார்த்துத் தான் வைக்கவேண்டும் விளக்கின் ஒளியில் லக்ஷ்மி குடியிருக்கின்றாள். எக்காரணத்தைக் கொண்டும் ஆண்கள் விளக்கை அணைக்க கூடாது. விளக்கிற்கு நெய்விட்டு ஏற்றுவது நல்லது. நெய் இல்லாவிடில் நல்லெண்ணெய்விடலாம். விளக்கைத்தானாக அணையவிடக் கூடாது. பூஜை செய்து முடித்துச் சில நிமிடங்கள் கழித்து ஒரு பூவை எடுத்து அணைத்து விடலாம். எண்ணெய் இல்லாது அணைவது கூடாது.

நன்றி.

**தின பூமி 97**

# மண்ணெண்ணெய் விநியோகத்தில் சில

அரசியலமைப்பு இருகட்சி ஆட்சிக்கு வழிசமைத்துள்ளது. ஒரு நாட்டின் அரசியல் நிர்வாகத்துக்கு இரண்டு பெரும்பாண்மை கட்சிகளின் தலைவர்கள் பொறுப்பாக இருப்பது அரச வண்டி ஓடுவதற்கு தடையாக இருக்கலாம்.

ஆனால், இனப்பிரச்சினை விவகாரத்தில் இரண்டு கட்சித் தலைவர்களும் ஆட்சிப்பீடத்தில் அமர்ந்திருப்பது. ஓர் சாதகமான-வரலாற்றுச் சந்தர்ப்பம். இச் சந்தர்ப்பம் எல்லாக்காலத்திலும் ஏற்படக் கூடியதல்ல, இதனை இரண்டு தலைவர்களும் சரியான-தகுந்தமுறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே நோர்வே பிரதமரின் உள்ளக் கிடக்கையாகும்.

இரண்டு கட்சித் தலைவர்கள் ஒரே காலத்தில் ஆட்சிப் பீடத்தில் இருப்பது இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வரலாற்று சந்தர்ப்பம் எனக் கூறப்பட்டாலும், தமிழ்மக்களின் உரிமையை ஒடுக்குவதற்காக இரண்டு தலைவர்களும் சேர்ந்துகொள்வார்களே தவிர, தமிழர்களுக்கு உரிமையை வழங்குதவற்காக அவர்கள் ஒன்று சேர்வார்கள் எனக் கூறுவது கடினமே.

# மண்ணெண்ணெய் விநியோகத்தில் சில பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் தில்லுமுல்லு

## மக்கள் விசனம் - யாழ் செயலகம் அதிருப்தி

யாழ் குடாநாட்டில் மண்ணென்ணெய்க்கு தட்டுப்பாடு ஏற்பட்டதை அடுத்து வடபிரந்திய பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் அங்கிகரிக்கப்பட்டவர்களின் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு மண்ணெனணெய் வழங்காமல் யாழ் மாவட்டத்திலுள்ள 23 ப.நோ.கூ. சங்கங்கள் மூலம் பாவனையாளர்களுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகளை வடபிராந்திய பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் அனுசரனையுடன் யாழ் செயலகம் மேற்கொண்டு அதனை நடைமுறைப்படுத்திவந்தது.

யாழ் செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட இந்த அடிப்படையிலான மண்ணென்ணெய் விநியோகம் எதிர் பார்த்த அளவு வெற்றியளிக்கவில்லை என யாழ் செயலக வட்டாரங்கள் விசனம் தெரிவித்திருந்தன.

(4ம் பக்கம் பார்க்க)

# தினசரி தியானம்

## நடுநிலை

நடுவு நின்றார்க் கன்றி ஞானமும் இல்லை
நடுவு நின்றார்க்கு நரகமும் இல்லை
நடுவு நின்றார் நல்ல தேவரும் ஆவர்
நடுவு நின்றார் வழி நானும் நின்றேனே,

திருமூலர்.

தராசு முனை நடுநிலைக்கு வருவது போன்று இன்ப துன்பங்களைச் சமனாகக் கருதி மனம் நடுநிலையில் உறுதி பெற்றிருக்க அறிவுத் தெய்வமே, நீ அருள்புரிவாயாக.

உல்கில் இன்பம் இருப்பது போன்று துன்பமும் உண்டு. துன்பத்தைத் தவிர்த்து விட்டு இன்பத்தை மட்டும் இவ்வுலகில் பெற முடியாது. தனி இன்பத்தை இங்கே பெற முயலுபவர் வீணே முயலுகின்றார். உலகத்தினின்று இன்பத்தை நாடாதிருத்தல் வேண்டும். தானே வந்தமையும் துன்பத்தைப் பொருட்படுத்தலாகாது . மனதை அப்படிப் பழக்கி விட்டால் அது நடு நிலையாகும் . அது மனிதனது மேன்மையை விளக்கவல்லது.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்.



சிவத்தமிழ் அன்னை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் 77வது பிறந்ததின நிகழ்வின் போது யாழ். மேல் நீதிமன்ற நீதியரசர் கே.பி.எஸ்.வரதராசா உரையாற்றுவதை படத்தில் காணலாம்.

# பண்ணைக்கடலில் மீன்பிடிக்க புதிய நேர நடைமுறை

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாக்கடற் பிரதேசத்தில் பண்ணைக் கடலுக்குக்குக் கிழக்கேயும், மேற்கேயும் வேறுபட்ட நேரங்களில் தொழிலை மேற்கொள்வதற்கான அனுமதியை இன்று முதல் கடற்படையினர் வழங்கியுள்ளனர்.

பண்ணைக் கடலுக்குக் கிழக்கே கொழும்புத்துறை, பாசையூர், குருநகர் மீனவர்களை இன்று அதிகாலை 2.00 மணி முதல் பி. ப. 4.00 மணிவரை மீன் பிடிப்பதற்கும், பண்ணைக் கடலுக்கு மேற்குப் பக்கமாக கொட்டடி, நாவாந்துறை, சாவற்காடு மீனவர்கள் இன்று அதிகாலை 1மணி முதல் பிற்பகல் 4மணி வரை மீன்பிடிப்பதற்கும் கடற்படையினர் அனுமதி வழங்கி உள்ளதாக கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் எஸ்.நவரத்தினம் தெரிவித்தார். (வ)

## நோர்வே...

ஒப்பந்தத்தில் அடங்கியுள்ள முக்கிய அம்சங்களோ எதுவும் வெளியிடப்படவில்லை.

யுத்தநிறுத்தம் குறித்தும், ஒப்பந்தம் தொடர்பாகவும் இரகசியமான முறையில் ஆராயப்பட்டுள்ளது.

இதேவேளை நோர்வே சமாதானக் குழுவினர் முஸ்லீம்காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமையும் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர். சுமார் ஒரு மணிநேரம் நடத்தியுள்ள இப்பேச்சு வார்த்தையின் போது ரவூப் ஹக்கீம் முஸ்லீம் மக்களின் நிலைப்பாடு குறித்து எடுத்துக் கூறியுள்ளார்.

நோர்வே தூதுக்குழுவினர் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்தராஜபக்ஷவையும் நேற்றிரவு சந்திப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை குழுவினர் இன்று சந்திக்கவுள்ளனர் நோர்வே சமாதானக்குழுவில் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஜவர் ஹெல்கீசன் முன்னாள் சிறப்புத் தூதுவர் எரிக்சொல்கெய்ம், வெளிவிவகார அமைச்சின் அதிகாரி செல்வி ஜஸ்ரின் ஸ்றொங்ஸ்ரால், இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்பேக் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். (வ)

## உத்தியோக...

தெரிவித்துள்ளார்.

அத்துடன் கொழும்பில் தமிழ்க் கட்சி கூட்டமைப்பாளர் பிரதமருடன் பேசி எடுத்த முடிவை அரசாங்கம் அமுல்ப்படுத்துமானால் அதனை மணவர்கள் இடைக்கால் தீர்வாக ஏற்றுக்கொள்வர் என்றும் சிவாஜிலிங்கம் மேலும் தெரிவித்துள்ளார். (இ.4)

## யுத்தநிறுத்தத்தை...

இலங்கையின் கண்காணிப்புக் குழுவில் 12பேர் இடம்பெற உள்ளனர் இவர்களில் புலிகளி தரப்பில் 6பேரும் அரசதரப்பில் 6பேரும் நியமிக்கப்படவுள்ளனர் (வ)


# யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் விஞ்ஞானக் கழகம் நடாத்தும்

## சிக்கலெண்கள் (COMPLEX NUMBERS)

## கணித நூல் வெளியீட்டு விழா

காலம்

நாளை (09.02.2002) சனிக்கிழமை (பி.ப. 5.00 மணிக்கு)

இடம்

நாவலர் கலாசார மண்டபம்

தலைவர்

திரு. க. இராசதுரை

(அதிபர் - யாழ் மத்திய கல்லூரி)

பிரதம விருந்தினர்

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை

(உப வேந்தர் - யாழ் பல்கலைக்கழகம்)

நூலாசிரியர்

மனுவல் வித்தியானந்தநேசன்

(B.Sc in Physical Sc (University of Jaffna)

Post Graduate Diploma in Population Studies (University of Colombo)

(பழைய மாணவன், யாழ் மத்திய கல்லூரி)

கௌரவ விருந்தினர்கள்

திரு. எஸ். சண்முகநாதன்

(யாழ் அரசாங்க அதிபர்)

திரு K. P. S. வரதராசா

(உயர் நீதி மன்ற நீதிபதி)

பேராசிரியர் K. கந்தசாமி

(தலைவர்- பௌதீகவியல் துறை)

திருமதி புஸ்பா இராஜரட்ணம்

(அதிபர் சுண்டிகுழி மகளிர் கல்லூரி)

வண. பிதா ஜெ. ஜெபமோகன்

திரு மனுவல் மங்களநேசன் M.M.C.

முதற் பிரதி பெறுபவர்:– திரு. A. நவனீதகிருஷ்ணன்

(ஓய்வு பெற்ற பொறியியலாளர்)

[4459]

விளம்பர அனுசரணை:–

ஜி. எஸ். லிங்கநாதன்
அன். கோ
13-14, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

லாவண்யா
பல், மூக்கு கண்ணாடி அகம்
552, ஆஸ் [illegible] வீதி,
யாழ்ப்பாணம்.



# பிறிமா மா விநியோகம்

"கெந்தல" கப்பல் மூலம் கொண்டுவரப்பட்ட மா நாளை பருத்தித்துறை துறைமுகத்தில் இறக்கப்படவிருப்பதால் நேரடியாகப் பெறவிரும்புவோர் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

## வி.எஸ்.பி குறூப்

99-150, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.



ITP RRAN

# INFORMATION TECHNOLOGY PARK

## Internet-Practical Workshop

(இணையத்தை கையாளும் யுக்திகள்)

ஆனேகரின் வேண்டுகோளுக்கிணங்க யாழ்நகரில் முதன் முதலாக *Internet Online Workshop* ஆரம்பிக்க உள்ளோம்

1st பிரிவு Mon, Wed, Fri
5.00pm to 7.00pm

2nd பிரிவு Mon, Wed, Fri
12.00pm to 2.00pm

3rd பிரிவு Sat & Sun
9.00am to 12.00pm

4th பிரிவு Sat & Sun
1.00pm to 4.00pm

Duration 1 Month
25 hours online Practical

Fee
only Rs.1000/=
ஆரம்பம் 15-02-02

*Further Details*
Deputy Director

*Information*
Director



IIS

*The Director, Course Director and Staff of the IIS Cordially Invite Patrons, Friends and Well wishers to the*

# 6th Institute Day

## Celebration

*at the Jubilee Hall St. John's College, Jaffna on Saturday the 9th February 2002*


# 9ம் ஆண்டு நினைவு நாள்

08-02-2002



யாழ்ப்பாணம்,

தொலைபேசி- 2150, 2140

[C/3501]


## 16ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 04 . 05 . 1949



உதிர்வு 24 . 01 . 2002

அமரர்

## சபாநாயகம் கோடீஸ்வரி

மெய்யாய், அம்மா! எமை விட்டுப் போனீரா?

பொய்தான் ..., பகற்கனவு ..., இதை நம்போம்.எம்தாயே

எப்போதும் சிரித்தபடி இருப்பீர்கள். உங்களை நாம்

எப்போது பார்ப்போம் இனி...?"

பிரிவால் துயருறும்
கணவன், பிள்ளைகள்.

இணுவில் தெற்கு,
இணுவில்.

[4460]



## அமரர் இ.ச. பேரம்பலம் (E.S.P)

எம்மைக் காத்து மனிதராக்கிய – ஐயா!
எமது மனம் மகிழ வேண்டி
பங்கமில்லா பொருளும் தந்து
பயில் கலை பெறவும் செய்தீர்
நுங்கமார் நிலையில் வைத்தீர்
சொற்றிடு கைமாறுண்டோ – சிங்கமே!
என்றும் எங்கள் உள்ளத்துள் – தோன்றுதையா!
உங்கள் திருமுகம்.
நித்தமும் தூபம் ஏற்றிடுவோம் தங்கள்
நிழலுக்கு – ஐயா!
எம் சேவை என்றும் – தொடரும் – ஐயா!
வா்ழ்க அவர் புகழ் – வளர்க அவர் நாமம்.

இ. ச. பேரம்பலம் சக நிறுவனம்,
50, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்,

நா. கந்தசாமி,
சு. சிவானந்தன் (நந்தன்)
மற்றும் நிறுவனச் சமூகம்

[C/3502]


இப்பத்திரிகை வலம்புரி அன் கோ தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 08-.02.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.